நட்சத்திரமாலை

சுவடியியல் பட்டமேற்படிப்புச் சான்றிதழுக்காக உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பாய்வேடு

டாக்டர் டி. மகாலட்சுமி,
எம். ஏ., எம்ஃபில்., பிஎச்.டி., பிஜிடிப். (மொ. பெ.,)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.
ஏப்ரல்-1989

நட்சத்திரமாலை

சுவடியியல் பட்டமேற்படிப்புச் சான்றிதழுக்காக உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பாய்வேடு

டாக்டர் டி. மகாலட்சுமி,
எம். ஏ., எம்ஃபில்., பிஎச்.டி., பிஜிடிப். (மொ. பெ.,)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.
ஏப்ரல்-1989

டாக்டர் பூ. சுப்பிரமணியம்,
சுவடியியல் துறை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

"நட்சத்திர மாலை" என்னும் தலைப்பில் அமைந்த இச்சுவடிப் பதிப்பாய்வேடு, 1988-'89 ஆம் ஆண்டில் சுவடியியல் பயிற்சிக் காலத்தில் என்னுடைய மேற்பார்வையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடியியல் மாணவி டாக்டர் டி.மகாலட்சுமி அவர்களால் உருவாக்கப் பெற்றது. இவ்வாய்வேடு பட்டமேற்படிப்புப் பட்டயம் பெறுவதற்காக அளிக்கப்படுகிறது. இப்பதிப்பாய்வின்மீது வேறு எந்தப் பட்டமும் இவருக்கு அளிக்கப்பெறவில்லை என்று சான்று அளிக்கிறேன்.

சென்னை-600 113,
நாள்: 28.04.1989

28.4.89

(மேற்பார்வையாளர்)
டாக்டர் பூ. சுப்பிரமணியம்,
சுவடி இயல் துறை,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

டாக்டர் டி. மகாலட்சுமி,
சுவடியியல் பட்டய மேற்படிப்பு மாணவி,
சுவடியியல் துறை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 113.

பதிப்பாய்வாளர் உறுதிமொழி

பட்டமேற்படிப்புப் பட்டயம் பெறுவதற்காக அளிக்கப் பெறும் "நட்சத்திர மாலை" என்னும் தலைப்பிலான இச்சுவடிப் பதிப்பாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும் என்று உறுதியளிக்கின்றேன்.

சென்னை-600 113,
நாள்:28.04.'89.

டி. மகாலட்சுமி
(டி. மகாலட்சுமி),
பதிப்பாய்வாளர்.

நன்றியுரை

'சுவடியியல் பட்டமேற்படிப்புப் பட்டயம்' படிப்பதற்கு வாய்ப்பு நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் டாக்டர் க.த. திருநாவுக்கரசு அவர்களுக்கும்,

சுவடியியல் அடிப்படைப் பயிற்சி அளித்து, பதிப்பிக்கும்போது ஏற்பட்ட ஐயங்களைத் தீர்த்து வைத்து, இந்தப் பதிப்பாய்வேடு முழுமை அடைய உறுதுணையாக இருந்த மேற்பார்வையாளரும், ஆசிரியப் பெருந்தகையுமான டாக்டர் பு. சுப்பிரமணியம் அவர்களுக்கும்,

சுவடியியல் பயிற்சிக்காலத்தில் வகுப்புகளை நடத்தி அறிவூட்டிய ஆசிரியப் பெருந்தகைகள் டாக்டர் க.த. திருநாவுக்கரசு, டாக்டர் ச. சிவகாமி, டாக்டர் சீ. சசிவல்லி ஆகியோருக்கும்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்திலுள்ள நூல்களை ஆய்விற்காகப் பயன்படுத்தும்போது நன்முறையில் ஒத்துழைப்பு நல்கிய நூலகர் திருமதி அ. யோகம், திருமதி இரா. பார்வதி அவர்களுக்கும்,

சிறந்தமுறையில் ஆய்வேட்டினைத் தட்டச்சுச் செய்தளித்த திரு. எ. முத்துக்கிருஷ்ணன் அவர்களுக்கும்,

என் உளங்கனிந்த நன்றி உரியதாகும்.

டி. மகாலட்சுமி.

உள்ளே

முன்னுரை

முன்னுரை

நுழைவாயில்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஒவ்வொரு நாட்டிலும் இருந்த ஞானிகள், அறிவாளிகள் வானத்திலுள்ள நட்சத்திரங்களுக்கும் இம் மண்ணுலகத்திலுள்ள மனிதனுக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்துவிட்டனர். இவ்வாறு கண்டுரைப்பட்ட தொடர்பை அறியக்கூடிய ஒரு வழிமுறையையும் அவர்கள் வகுத்துத் தந்துள்ளனர். இந்த வழிமுறைதான் 'சோதிடம்' என்றழைக்கப்படுகிறது.

ஆய்வேட்டின் தலைப்பு

இப்பதிப்பாய்விற்கு எடுத்துக்கொண்ட சுவடியின் பெயர் 'நட்சத்திர மாலை' என்பதாகும். இத்தலைப்புப் பொருள் பொருத்தமுற அமைந்திருப்பதால் இவ்வாய்வேட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆய்வு நோக்கம்

இதுவரை சோதிடத்துறையில் யாரும் நட்சத்திரப் பலன்களைக் கூறும் எந்த ஒரு சுவடியையும் இதுபோன்று முழுமையாகப் பதிப்பித்ததாகத் தெரியவில்லை. ஆதலால், இந்த நூலைப் பதிப்பித்துச் சோதிடத்துறைக்கு மேலும் ஒரு நூலைச் சேர்க்க வேண்டும் என்பது அடிப்படை நோக்கமாக அமைந்தது.

மேலும், இச்சுவடிக்கு இதுவரை அச்சு நூல் வந்திருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இதனைத் தவறின்றிப் பதிப்பித்து ஒரு நூலை உருவாக்குவதும் இவ்வாய்வின் நோக்கமாகிறது.

ஆய்வு மூலங்கள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள 'நட்சத்திர மாலை' (207) என்னும் சுவடியே இப் பதிப்பாய்விற்கு மூலமாக அமைகிறது. மேலும், இத் தலைப்பில் 7 சுவடிகள் அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் கிடைக்கப் பெற்றன. இவற்றுடனும், குறிப்பாக D.2640 என்ற எண்ணுடைய சுவடியுடனும், பதிப்பாய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சுவடி ஒப்பு நோக்கப்பட்டது.

இச்சுவடியை எடுத்ததற்கான காரணம்

மேலே குறிப்பிட்ட சுவடிகளைக் காட்டிலும் இச்சுவடி நன்றாகவும், முழுமையாகவும், பிழை குறைவாகவும், தெளிவான செய்திகளுடனும் இருந்தது. மேலும், ஏடுகள் சிதைவடையாமலும் பூச்சியரிக்காமலும் கிடைக்கப் பெற்றன.

ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வேட்டில் முன்னுரை, நூல் பற்றிய திறனாய்வு, நூல் (மூலம்), முடிவு, இணைப்பு ஆகியன இடம்பெறுகின்றன.

முன்னுரையில் இச்சுவடியைப் பற்றிய ஓர் அறிமுகம், பதிப்புரை, சோதிடத்தைப் பற்றிய ஓர் அறிமுகம் ஆகியனஅடுத்தடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

'நூல் திறனாய்வு' என்ற தலைப்பின்கீழ், சுவடி ஆய்வு நிலையில் நோக்கப்படுகிறது. நூல் என்ற தலைப்பின்கீழ், சுவடியிலுள்ள மூலம் தூய்மை செய்து பதிப்பித்துத் தரப்பட்டுள்ளது.

முடிவுப் பகுதியில் இப்பதிப்பாய்வினால் கிடைக்கும் முடிவுகள் சுருங்கக் கூறப்பட்டுள்ளன.

துணைநூற் பட்டியல், சொல்லடைவு, அருஞ்சொற்பொருள் ஆகியன இணைப்பில் தரப்பட்டுள்ளன.

சுவடி அறிமுகம்

சுவடி அறிமுகம்

சுவடி - பெயர்க்காரணம்

27 நட்சத்திரங்களின் பலனும் முறையே மாலை போன்று கோவையாக ஒன்றன்பின் ஒன்றாகக் கூறப்படுவதால் 'நட்சத்திர மாலை' என்ற பெயர் பொருத்தமுடையதாகின்றது.

சுவடி - தோன்றக் காரணம்

ஆசிரியரது சோதிடப் பற்றும், சோதிடப் புலமையும் நூல் தோன்றக் காரணங்களாகின்றன. சோதிடக் கலையை மக்களிடையே பரப்பி நம்பிக்கையூட்டுதலும் ஒரு காரணமாகின்றது. ஆசிரியரின் முன்னோரும், ஆசிரியரும் சோதிடராய் இருந்த காரணமும் நூல் தோன்ற வழிவகுத்திருக்கின்றது.

சுவடி - சிறப்பு

இச்சுவடியில் 12 இராசிகளின் பொதுப்பலன் கூறப்பட்டுள்ளது. அதேபோல், 27 நட்சத்திரங்களுக்கும் பொதுப்பலன் தரப்பட்டுள்ளது. பின், ஒவ்வொரு நட்சத்திரத்திலுள்ள நான்கு பாதங்களுக்கும் தனித்தனிப் பலன் கூறப்பட்டுள்ளது. பிறப்புமுதல் இறப்புவரையான பல செய்திகள் சுட்டப் படுகின்றன. இங்ஙனம், நட்சத்திரம் பற்றிய செய்திகளை விரிவாகவும் எளிமையாகவும் கூறுவது இச்சுவடிக்குச் சிறப்புச் சேர்க்கின்றது.

சுவடி - அமைப்பு

முதலில் நட்சத்திரத்தின் பொதுப்பலன் பற்றிய ஒரு பாடலும், பின் அந்நட்சத்திரத்திற்குரிய இராசியின் பொதுப்பலன் பற்றிய ஒரு பாடலும் இடம்

பெறுகின்றன. பின்னர், அந்நட்சத்திரத்திற்குரிய தெய்வம், பூதம் முதலிய 12 உருப்படிகள் சுட்டப்பட்டுள்ளன. அவ்வந்நட்சத்திர நாளில் ஏற்படும் வியாதி, அதற்குரிய பரிகாரம் ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நட்சத்திரத்தின் நான்கு கால்களுக்கும் முறையே 4 பாடல்கள், 4 காலச் சக்கரங்கள் (ஒரு பாடல், ஒரு காலச் சக்கரம் என்ற முறையில்) கொடுக்கப்பட்டுள்ளன. பின், மகாதிசையின் பலன் கூறப்பட்டுள்ளது. இறுதியில் இன்னின்ன வயதில் இன்னின்ன ஏற்படும் என்றும், இறக்கும் காலத்தைக் குறியும் இச்சுவடி முடிகின்றது.

***

பதிப்புரை

பதிப்புரை

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பல தமிழ் ஆராய்ச்சிகளுடன் சுவடியியல் துறையின்வழி ஏட்டுச் சுவடியில் எழுதி வைக்கப் பட்டுள்ள நூல்களைப் பதிப்பித்தும் வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஐந்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்துச் சுவடியியல் பட்டயக் கல்வி வழங்கப்படுகிறது. இப்பட்டயச் சான்றிதழிற்காக ஒவ்வொரு மாணவரும் இதுவரை அச்சாகாத ஏட்டுச்சுவடி ஒன்றைப் பதிப்பித்து ஆய்வேடாக அளிக்கவேண்டும். இங்கு அவ்வாறு பதிப்பிக்க எடுத்துக்கொண்ட சுவடி 'நட்சத்திர மாலை' என்பதாகும். சோதிடத் துறைக்குச் சிறப்புச் சேர்க்கும்வகையில் இச்சுவடி செம்மைப்படுத்தப் பட்டு முதன்முறையாகப் பதிப்பிக்கப்படுகிறது.

சுவடியைப் பற்றிய செய்திகள்

துறை

'நட்சத்திர மாலை' எனும் இச்சுவடி சோதிடத் துறையைச் சேர்ந்தது. பனை ஓலை ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இச்சுவடி, இந்நிறுவன நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஓலையின் புற அமைப்பு

இந்நூலில் 1 முதல் 91 வரையான ஏடுகள் தொடர்ச்சியாக உள்ளன. ஒவ்வொரு ஏடும் 28.5 செ.மீ. நீளமும் 3 செ.மீ. அகலமும் உடையதாகும். சுவடி ஒடிவும் பொடிவும் இன்றி நன்றாக உள்ளது. பல இடங்களில் துளைகள் உள்ளன. பிற சுவடிகளைப் போன்றே முன், பின் இருபுறங்களிலும் சட்டம் இடப்பட்டுள்ளது. இவ்விரு சட்டங்களின் முன்புறமும் இரு வெற்று ஏடுகள் காணப்படுகின்றன.

சுவடியின் அக அமைப்பு

சுவடியின் இருபுறத்தும் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் ஆறு வரிகள் உள்ளன. சில ஏடுகளில் ஐந்து வரிகள் உள்ளன. சுவடி எண்களைத் தவிர (அதாவது ஏடுகளின் எண்ணிக்கையைக் காட்டும் எண்) பாடல்களுக்கு எண்கள் இடம்பெறவில்லை. ஏடுகளின் இடப்புற ஓரத்தில் உட்டலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்துகள் தெளிவாக உள்ளன. சுவடியின் தொடக்கத்தில் இறை வணக்கப் பாடல் இடம்பெறவில்லை. இறுதி ஏட்டில் ஏடு இன்னாரால் எழுதப்பெற்றது என்ற செய்தி இல்லை.

நடைச் சிறப்பும் பாடலடி அமைப்பும்

பாட்டும் உரைநடையும் கலந்த அமைப்பினை உடையது. இந்நூலில் 155 பாடல்கள் உள்ளன. பாடல்கள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைந்துள்ளன.

எழுத்து அமைப்பு

மெய்யெழுத்துக்குப் புள்ளி வைத்தும் வைக்காமலும் உள்ள நிலை காணப்படுகிறது. குறில், நெடில் வேறுபாடுகள் சில இடங்களில் மட்டுமே உள்ளன. கூட்டெழுத்துகளும் காணப்படுகின்றன. (யூ-யும், தி-த்தி, ஜ-ஜ்ஜா, ள -ள்ளா).

காணப்பட்ட பிழைகள்

படி எடுப்போரின் கல்விக் குறைவினாலும், வட்டாரமொழித் தாக்கத்தினாலும், உச்சரிப்புப் பிழையாலும், கவனக்குறைவாலும் பல பிழைகள் ஏற்பட்டுள்ளன. 'ழ'கர, 'ள'கர வேறுபாடு, 'ற'கர 'த'கர வேறுபாடு, 'மீனவியாழம்' என்பதை 'மீனவியாஉடூம்' என்று எழுதுதல், 'பூர்வபட்சம்' என்பதை 'பூற்பஉக்ஷஉடூம்' என எழுதுதல் ஆகியவை உச்சரிப்பால் ஏற்பட்டவை. 4 அடிப் பாடலை 3 அடியாக எழுதியமை

(பாடல் எண் 16) கவனக்குறைவால் அல்லது புலமைக் குறைவால் ஏற்பட்ட பிழை. ஒவ்வொரு நட்சத்திரத்திலுள்ள 4 கால்களுக்கும் முறையே 4 பாடல்களென எழுதி வரும்போது இடையே இரு இடங்களில் பாடல் விடுபட்டமையும், அதேபோல் ஓரிடத்தில் காலச் சக்கரம் விடுபட்டமையும், சில இடங்களில் காலச் சக்கரம் பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு தவறாக இருப்பதும் ஆசிரியரின் கவனக் குறைவு ஆகும்.

மேலும், வடசொல் கலப்பும் மிகுதியாகக் காணப்படுகின்றது. மேற்கூறியவையும் இச்சுவடியிலுள்ள எழுத்து மாற்றங்களும் இயன்றவரையில் திருத்தப்பட்டுச் சுத்தப்பதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்ஙனம் திருத்தப் பட்டவற்றுள் முக்கியமானவை இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன.

<u>சுவடியில்</u>		<u>திருத்தம்</u>
யீசுபரன்	...	ஈசுவரன்
மயேசுபறன்	...	மகேஸ்வரன்
விருச்சிகம்	...	விருச்சிகம்
பரமாயித்தியம்	...	இறைவனடி சேர்வார்
சுரம்	...	காய்ச்சல்
ஸ்ரீயால்	...	பெண்ணால்
யிப்பால்	...	இப்பால்
யெட்டிமரம்	...	எட்டிமரம்
ரெண்டு	...	இரண்டு
வசியன்	...	வைசியன்
அசுபதி	...	அசுவினி
பிறிதிவு	...	பிருதிவு
மறம்	...	மரம்
மரை	...	மறை

தோன்றில்	...	தோன்றில்
ஒன்பொருள்	...	ஒன்பொருள்
சநி	...	சனி
னல்லன்	...	நல்லன்
நோவால்	...	நோயால்
பெத்த	...	பெற்ற
தநசு	...	தனுசு
சூரியம்	...	சூலியம்
வியாம்பத்து	...	வியாழம்பத்து
மீனவியாஉநம்	...	மீனவியாழம்
கவபல	...	கலைபல
அடந்தோர்	...	அடைந்தோர்
செவ்வா	...	செவ்வாய்
பிடவை	...	புடவை
பெனி	...	பனி
வையாசி	...	வைகாசி
ஆகாசம்	...	ஆகாயம்
வயறுவலி	...	வயிற்றுவலி
கிணம்	...	கணம்
கருடன்	...	கெருடன்

<u>மூலச்சுவடியா?</u>

இது மூலச் சுவடியா? வழி ஏடா? என ஆராயப்பட்டபோது 'நட்சத்திர மாலை' என்ற ஒரே பெயரில் பல சுவடிகள் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் இருந்தன. அவையாவன: R.238 (C), R.308 (D), R.4841, R.7538, D.2014, D.2640, D.2641 ஆகிய எங்களுடைய சுவடிகள் 'நட்சத்திர மாலை' என்ற பெயரமைந்த சுவடிகளாகும்.

பதிப்பிக்க எடுத்துக்கொண்ட சுவடி (எண் 207), மற்றும் மேற்கூறிய அனைத்துச் சுவடிகளிலும் முதற் பாடல் ஒன்றாகவே உள்ளது. மற்றச் செய்திகளில் ஒற்றுமை, வேற்றுமை இரண்டும் காணப்படுகின்றன. கிடைத்த சுவடிகளில் D.2640, D.2641 ஆகிய இரண்டும் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட சுவடிக்கு மிகவும் தொடர்புடையதாய் உள்ளன. D.2640 மிகவும் பழைய சுவடியாக உள்ளது. பல இடங்கள் சிதைந்துள்ளன. ஆனால் D.2641 இன் ஓலை நன்றாக உள்ளது. D.2640 இல் உள்ள செய்தி அப்படியே எழுதப்பட்டு, சிதைந்த பகுதிகள் இடைவெளிவிட்டுக் காட்டப்பட்டுள்ளன. எனவே, D.2640 ஐப் பார்த்து D.2641 எழுதப்பட்டுள்ளது.

மற்றபடி D.2640இல் உள்ள செய்திகளே 207 இலும் உள்ளன. ஆனால், பெரும்பான்மையான பாடல்களில் முன், பின், இடைப்பகுதி மூன்றிலும் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதுபோலவே காலச் சக்கரம், மகாதிசை பலன் போன்றவற்றிலும் வேறுபாடுகள் உள்ளன. D.2640 இல் உள்ள சில செய்திகள் 207 இல் விடப்பட்டுள்ளன. செய்திகளின் முறைவைப்பு D.2640 ஐக் காட்டிலும் 207 இல் நன்றாக உள்ளது. பதிப்பிக்க எடுத்துக் கொண்ட சுவடி உட்டலைப்புகள் கொடுக்கப்பட்டு ஒவ்வொரு நட்சத்திரத்திற்குரிய எழுத்துகள் குறிக்கப்பட்டு மிகத் தெளிவாக உள்ளது. எனவே, இதனை எழுதியவர் D.2641 ஐ மூலச் சுவடியாக வைத்துக்கொண்டு பிற சுவடிகளை ஒப்புநோக்கி 'நட்சத்திர மாலை' (207) என்ற இச்சுவடியை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. எனவே, இது மூல நூலாகக் கருதப்படுகிறது.

பதிப்பில் மேற்கொண்டவை

பாடல்கள் எண் இடப்பட்டு, சீர் பிரித்து, அடி பிரித்து எழுதப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி ஆகியன இடப்பட்டுள்ளன. குறில், நெடில் வேறுபாட்டோடு எழுதப்பட்டுள்ளது. வழக்குச் சொற்கள் திருத்தப்பட்டுள்ளன. வடசொற்கள் பல இடங்களில் தமிழ்ச்

சொற்களாக்கப்பட்டுள்ளன. D.2640 சுவடியை ஒப்புநோக்கி, விடுபட்ட இரு பாடல்கள் (3, 104), ஒரு காலச் சக்கரம், காலச் சக்கரத் திருத்தம் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன. இங்ஙனம், சேர்க்கப்பட்டவை சுவடி மூலத்தில் 'ப'கர அடைப்பில் காட்டப்பட்டுள்ளன.

சுவடியின் பொருள் பொருத்தம், இச்சுவடியிலே இடம்பெற்றுள்ள செய்திகள் இவற்றைக்கொண்டு பதிப்பாசிரியர் செய்த திருத்தம், சொல்விட்டு நிரப்பிய இடங்கள், எண்ணிக்கைகளைச் சரிசெய்த இடங்கள் ஆகியன 'பிறை' அடைப்பில் தரப்பட்டுள்ளன. ... ... 'புள்ளி' வைக்கப்பட்ட இடங்கள் ஆசிரியரால் எழுதாமல் விடப்பட்டவையும் மேலே கூறியமுறையில் நிரப்ப முடியாதவையும் ஆகும் என்பதைக் குறிக்கிறது.

மூன்று பாடல்களில் (59, 126, 153) 7 சீர் வருகின்றன. அதிகப்படியான ஒரு சீரின்கீழே கோடிடப்பட்டுள்ளது.

'நட்சத்திர மாலை' எனும் சுவடியைப் பதிப்பிக்க மேற்கொண்ட பதிப்பு முயற்சிகளின் விளக்கம் மேற்கூறியவாறு அமைகிறது.

***

சோதிடம் - ஓர் அறிமுகம்

சோதிடம் - ஓர் அறிமுகம்

வேதங்கள் எவ்வளவு பழமையுடையனவோ அவ்வளவு பழமையுடையது சோதிடம். சோதிடம் என்பதன் பொருளாக 'நட்சத்திரங்களின் தூதுச் செய்தி' என்பது கொள்ளப்படுகிறது. இது வானவியல்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்துள்ளது. இது விண்வெளியில் ஏற்படும் அரிய நிகழ்ச்சியையும், அதற்கு ஒத்த பூமியில் ஏற்படும் நிகழ்ச்சியையும் விளக்குகின்றது. வானவியல்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்த சோதிடத்தின் விளக்கமான விதிகளைப் பயன்படுத்தி, அவைவழின் நன்மை தீமைகளுக்கான நிகழ்ச்சிகளையும் உய்த்துணர முடியும். இவ்வகையில் இதனை நாம் இயற்கையை விளக்கும் பயனுள்ள அறிவியல் எனலாம்.

சோதிடம் காரண காரியங்களை விளக்கித் தற்செயலாக எதுவும் நடப்பதில்லை என்பதை உணர்த்தி, நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு நியதிப்படி உலகம் முழுமையும் தெய்வீக முறையில் ஒழுங்குபடுத்தி இயங்குவதன் அடிப்படையைப் புலப்படுத்துகிறது. இவ்வகையில் சோதிடம், மக்களுக்குப் பயனுள்ள சேவையைச் செய்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள அறிவியல் என்றும் கூறலாம்.

சோதிட வரலாறு

சோதிட வரலாறு உலக மக்கள் தோன்றிய காலந்தொட்டுத் தொடங்குகிறது. மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்த இச்சோதிடத்தைப் பற்றிய வரலாறு உணர்தற்குரியது.

கார்க்கி என்ற முனிவர் உலகத்தைப் படைத்த பிரம்மாவிடம் இச் சோதிடத்தைக் கற்றதாகவும், தன்னிடமிருந்து மற்ற முனிவர் அதனைக் கற்றுக்

கொண்டதால் பரவலாயிற்று என்றும் கூறியிருக்கிறார் எனச் சோதிட நூல்கள் கூறுகின்றன.

மேலை நாட்டுச் சோதிட நூல்கள் கி.மு. 3769 இல் இருந்த சேத் (Seth) என்பவர் முதலாவது சோதிட நிபுணர் என்றுரைக்கின்றன. இவர் கதிரவனின் பாதையைக் கண்டுணர்ந்து இராசி மண்டலத்தைப் பன்னிரண்டு சம பாகங்களாகப் பிரித்தார்.

மேலும், இங்கிலாந்து நாட்டுக் காட்சியகத்திலுள்ள பாபிலோனியச் சோதிடச் சின்னங்களில் சில 5000 ஆண்டுகளுக்கு முந்தியவையாகக் கருதப் படுகின்றன.

அலெக்சாண்டர், கிரேக்க நாட்டுச் சோதிடரைப் பெருமதிப்புடன் வைத்திருந்தார் என்றும், தான் நாடுபிடிக்கச் செல்லும்போது தன்னுடன் 'கல்தேனீ' என்ற சோதிட நிபுணரை அழைத்துச் சென்றாரென்றும் வரலாறு கூறுகின்றது.

சீன நாட்டவர் தங்கள் அரசரை, சோதிடரை நாடித் தேர்ந்தெடுத்து வந்தனர் என்றும், சோதிடத்தை விருத்தி செய்தனர் என்றும் வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன.

இங்ஙனம், எல்லா நாட்டவரும் சோதிடத்தைத் தொடக்கக் காலத்திலிருந்தே மதிப்புடன் பயன்படுத்தி வந்தனர். இவ்வகையில் மக்களிடையே நிலவிய சோதிடத்தில் நாட்டங்கொண்டு அதை வளர்த்த புகழ்மிக்க அறிஞர் சிலரின் பெயர்கள் கீழ்வருமாறு:

கலிலியோ, நியூட்டன், பித்தாகோரஸ், கெப்ளர், கோபர்நிக்கஸ், ஆலன்லியோ, உறிபோகிரேட்ஸ்.

இந்தியாவில் கார்க்கி முனிவர் தம் சீடருக்குச் சோதிடத்தைக் கற்றுத் தந்தார். யவனர், சோதிட வல்லுநராக இருந்ததற்கான குறிப்புகள் காணப் படுகின்றன. வராகமிகிரர் என்ற முனிவர் தம் நூலில் யவனர் சோதிடத்தில் பயிற்சி பெற்றிருந்தனர் எனப் புகழ்ந்து குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இந்தியாவில் வளரத் தொடங்கிய சோதிடத்தின் வளர்ச்சியில் இடம்பெறும் புகழ்வாய்ந்த அறிஞர் சிலர் பின்வருமாறு:

கார்க்கி, விருத்தாகார்க்கி, ஆரியபட்டர், பிருகு, கபிலர், சப்தரிஷி, வராகமிகிரர், சகா, காளபுக்கர், சாவித்ரா, வைத்தியநாத தீட்சிதர் மற்றும் பலராவர்.

இங்ஙனம், எல்லாக் காலத்திலும் நன்முறையில் போற்றி வந்த சோதிடத்தின் வரலாற்றைக் காண முடிகின்றது.

காலப்போக்கில் மேன்மேலும் வளரவேண்டிய இத்துறை, வளராமல் காணப்படுகிறது எனில் அது மிகையாகாது. ஒவ்வொரு அறிவியல் துறையும் தன் இயல்பான முறையில் நமக்குப் பயன்பட்டு வந்தபோதும், ஒரு குறிப்பிட்ட அறிவியல் துறை மிகுதியான கவனம் பெற்றும், வளர்க்கப்பட்டும் வந்துள்ளதை ஒவ்வொரு கால கட்டத்திலும் காணலாம். பொதுவாக, ஒவ்வொரு நாட்டிலும் அறிவியலின் ஒரு துறை ஏதோ ஒருவகையில் முன்னேற்றம் அடைந்திருப்பதை அறியலாம். எனவே, ஒவ்வொரு கால கட்டத்திலும் குறிப்பிட்ட ஒரு துறை இதரத் துறைகளைக் காட்டிலும் சிறப்பிடம் பெற்று வந்துள்ளமை தெரிகிறது. இதுபோல் சோதிடத்தின் வளர்ச்சி நம் நாட்டில் தகுந்தவாறு ஊக்கப்படுத்தப் படும்போது, சோதிடம் பயனுள்ள அறிவியல் துறையாக மாறும் என்பது திண்ணம். சோதிடத்திற்கென அறிவியல் கல்வித்துறை அமைத்துக் கற்றுத் தருதல் இதற்கு முதற்படியாக அமைய வேண்டும்.

அமெரிக்க நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் சோதிடக் கல்வி

வழங்கப்படுகிறது. ஜெர்மனி, ஆலந்து, பிரெஞ்சு, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் சோதிடத்திற்கெனத் தனிப்பள்ளிகள் உள்ளன. சோதிடஆராய்ச்சியும் இன்று நடந்து வருகிறது. நியூயார்க் சோதிட ஆராய்ச்சி மன்றத்தினர் சார்பில் சார்லஸ்ஜேன் (Charles Jayne) என்ற ஆசிரியர் காலாண்டு இதழ் நடத்தி வருகிறார். இதில் ஆராய்ச்சியாளர் கட்டுரைகள் பல எழுதி வருகின்றனர்.

இங்ஙனம், அறிவியல் முன்னேற்றம் கண்டு வரும் சோதிடம் எள்ளி நகையாடட் படுவதையும் இங்குச் சுட்டாமல் இருக்கமுடியாது. சோதிடத்தின் மதிப்பையும், அதன் பயனையும் வளர்க்கும் அவா இல்லாமலும் ஆழமான ஆராய்ச்சி இன்றியும், சோதிடத்தில் நல்ல தேர்ச்சி அடையாமலும் சோதிடம் பலரால் கையாளப் படுவது இதற்குக் காரணம் எனத் துணியலாம். இந்தக் குறைபாடு நீங்க, சிறந்த அறிவியல் நோக்கில் சோதிடக் கல்வியை ஏற்படுத்தி, சோதிடம் என்பது ஒரு அறிவியல் துறை என்பதை நிலைநாட்ட வேண்டும். அத்தகைய காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதும் எதிர்கொள்ளத்தக்கது.

சோதிடத்தின் பயன்

சோதிட விதிகளை நன்கு புரிந்துகொண்டு எல்லா வகையிலும் மிகவும் சரியான முறையில் சோதிட அறிவு பயன்படுத்தப்படும்போது, உறுதியற்ற மனமுடையவர், மனம் தளர்ந்தவர், கவலையுற்றவர், மனம் அலைபாய்பவர், தீர்மானிக்க முடியாதவர் முதலானோர் அமைதி பெறுவர். நல்ல திறமையான சோதிடர், மிகுந்த கவனமுடன் செயல்பட்டு, தன்னை நாடிவரும் இடர்ப்பாடுகளால் அவதியுறுபவருக்கு நம்பிக்கையும் மனபலமும் அளிக்க முடியும். தெரியாத எதிர்காலத்தைப் பற்றிய முன்னறிவை நல்ல சோதிடரால் அளிக்க முடியும். இச்சோதிட அறிவு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு மனிதனைச் சம மனநிலையில் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யும்.

சோதிடத்தின் பிரிவுகள்

சோதிடத்தில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. வைத்தியமுறை சோதிடம்,

உலகியலான சோதிடம், பிறந்த காலத்திற்குரிய சோதிடம், பிரசன்ன சோதிடம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

வைத்தியமுறை சோதிடம் (Medical Astrology)

நோயின் தன்மையையும், குணப்படுத்தும் முறையையும், நோய் குணமாகும் காலத்தையும், நோய் ஏற்படுத்தும்/ மன நிலையையும் அறிய பயன்படுவது வைத்திய முறைச் சோதிடம் எனப்படுகிறது. அமெரிக்காவில் சோதிடத்தைக் கற்ற பல வைத்திய நிபுணர் இந்த வகையில் வைத்தியமுறை சோதிடத்தைக் கையாண்டு நல்ல வெற்றியையும் கண்டு வருகின்றனர்.

இச்சோதிடம் சரியானமுறையில் பயன்படுத்தப்படும்போது ஆயுளை நீட்டி, மருத்துவச் செலவைக் குறைத்து, நல்ல உடல்நலம் தரவல்ல வியக்கத்தக்க ஒரு அறிவியல் துறையாக இது விளங்கும்.

உலகியலான சோதிடம் (Judicial | Mundane Astrology)

உலகில் எந்தெந்த நாடு போரில் ஈடுபடும், நிலநடுக்கத்தால் பாதிக்கப்படும், பொருளாதாரச் சிக்கல், தீ, வெள்ளம், பஞ்சம் போன்றவற்றால் தாக்கப்படும் என்பன போன்ற உலக நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளப் பயன்படுவது உலகியலான சோதிடம். இப்பிரிவு வளராமல் காணப்படுகிறது.

பிறந்த காலத்திற்குரிய சோதிடம் (Natal Astrology)

ஒருவரின் பிறந்த நேரத்தையும் பிறந்த இடத்தையும்கொண்டு, கோள்களின் நிலையைக் காட்டக்கூடிய ஒரு சக்கரம் வரையப்பட்டுக் கூறப்படுகின்ற சோதிடம் இவ்வகையைச் சார்ந்தது. இத்தகைய சக்கரத்தின்மூலம் ஒருவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளனைத்தையும் கூற முடியும். வாழ்வில் இனிமேல் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளின் சரியான காலத்தையும் கணிக்கமுடியும். இத்தகைய சோதிடத்தை அனைவரும் பயன்படுத்தலாம். இது சோதிடப் பிரிவுகளில் மிகவும் முக்கியமான பிரிவாகவும் கருதப்படுகிறது.

பிரசன்ன சோதிடம் (Horary Astrology)

இவ்வகைச் சோதிடப் பிரிவு பெரும்பாலும் பிறந்த காலத்திற்குரிய குறிப்புகள் இல்லாதவருக்கும், பிறந்த நேரம் சரியாகத் தெரியாதவர்களுக்கும், அவர்களின் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகிறது. ஒருவர் கேள்வி கேட்கும்போது இருக்கின்ற கோள்களின் நிலையை ஆராய்ந்து நடக்க இருக்கும் பலனை முன்னறிந்து கொள்ளப் பயன்படும் சோதிடமாகும் இது. மேலும், மேற்கூறிய சோதிடப் பிரிவுகளின் பலன்களை உறுதிப்படுத்துவதற்கும் இது பயன்படுகிறது.

இவ்வாறான சோதிட வகைகளில் பல்வேறு கூறுகள் பங்காற்றுகின்றன. அவற்றுள் சில முக்கியமான அடிப்படைக் கூறுகளான 9 கோள்கள், 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள், திசை-புத்தி, ஜாதகம், இலக்கினமும்-பாவங்களும், நவாம்சம், கேந்திரம்-திரிகோணம், கோட்சாரம், உச்சம்-நீச்சம், யோகம்-தோசம், திதி முதலியவற்றைப்பற்றி இங்குக் கூறுதல் அவசியமாகிறது.

கோள்கள்

நம்முடைய சூரியக் குடும்பத்தில் பூமி, சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவையன்றியும் யூரேனசு, நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. ஆனால், நம்முடைய சோதிடக் கணக்கிற்குச் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஏழு கோள்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இத்துடன் இராகுவும் கேதுவும் கோள்களாகக் கருதப்பட்டுச் சோதிடக் கணக்கில் இடம்பெறுகின்றன. எனவே, அவற்றின் தன்மைகளைப் பற்றி விரிவாக இங்கு அறிவது பொருத்தமாக அமையும்.

சூரியன் -- தந்தை

சூரியக் குடும்பத்திற்குத் தந்தை போன்றவன் சூரியன். மேற்கூறிய ஒன்பது கோள்களில் மிகவும் பெரியது. சூரியக் குடும்பத்திலுள்ள ஆறு (சந்திரன்,

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி) கோள்களையும் கூட்டி ஒப்பிடும் போது, சூரியன் அவற்றின் மொத்தத்தைக் காட்டிலும் 750 மடங்குப் பெரியது. உயிர்வாழ்வதற்கு, சக்திக்கு எனப் பல்வகையிலும் சூரியனின் ஆதிக்கம் செயல் படுவதால் இது சூரியக் கடவுளாகக் கருதப்படுகிறது. எனவே, ஞாயிறு தோறும் 'சூரிய நமஸ்காரம்' செய்வது வழக்கத்தில் காணப்படுகிறது. சூரியன் மேசத்தில் நுழையும் நாள் தமிழ்நாட்டில் தமிழ்ப் புத்தாண்டாகக் (சித்திரை - 1) கொண்டாடப்படுகிறது. சூரியன் மேசத்தில் உச்சமும் துலா ராசியில் நீச்சமும் பெறுகின்றது. உடல் வலிமையையும், துணிவையும் கொடுக்கும் சூரியனுக்குரிய இதரப் பெயர்கள் பித்ருகாரகன், ஆதித்தன், அருணா, இரவி, திவகரன் என்பவையாகும். ஒருவருடைய ஜாதகத்தில் சூரியன் தந்தையைக் குறிக்கும். அதாவது தந்தையின் இன்ப துன்பங்களையும் அவருடைய வாழ் நாளையும் குறிக்கும். பெண் ஜாதகத்தில் கணவனைக் குறிக்கும். 1, 4 சூரியனுக்குரிய எண்கள். வைரமும் ரூபியும் சூரியனுக்குகந்த கற்கள். சோதிடத்தில் சூரியனும் சந்திரனும் கோள்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், சூரியன் வானிலுள்ள ஒரு நட்சத்திரம். சந்திரன் பூமியைச் சுற்றிவரும் ஒரு துணைக்கோள் (Sattellite).

<u>சந்திரன் - தாய்</u>

சந்திரன் பூமிக்கு மிகவும் அருகிலுள்ள கோள். சூரியக் குடும்பத்தில் இது ஒன்றுதான் பூமியைச் சுற்றிச்சுற்றி வருகிறது. சூரியனுடைய ஒளி இதன் ஒரு பக்கத்தில் மட்டும் எப்பொழுதும் படும். இந்தப் பகுதிதான் சந்திரனின் ஒளி தெரிவதற்குக் காரணம். அதாவது சந்திரன் சூரியனுடைய ஒளியைப் பூமிக்குப் பிரதிபலிக்கிறது. எனவே, பூமியானது சூரியனிடமிருந்து ஒளியை நேரடியாகவும் சந்திரனிடமிருந்து மறைமுகமாகவும் பெறுகிறது. சந்திரன் பூமியைவிடச் சிறியது. சந்திரன் இராசி மண்டலத்திலுள்ள 12 இராசிகளையும் 27 நாள்கள் 7 மணி 43 நிமிடங்களுக்கு ஒருமுறை சுற்றி வருகிறது; சராசரி தினந்தோறும் 13° அளவு நகருகின்றது. ரிஷபத்தில் உச்சமும் விருச்சிகத்தில் நீச்சமும் அடைகிறது.

அறிவைக் கொடுக்கும் சந்திரன் மனத்தைக் குறிப்பதால் மதி என்றழைக்கப்படுகிறது. இதனை மாத்ருகாரகன் என்றும் கூறுவர். சந்திரன் சோதிடத்தில் எப்பொழுதும் தாயைக் குறிக்கும். 2,7 இதற்குரிய எண்கள். புஷ்பரகம், வெள்ளை வைரம் இதற்குகந்தவை.

செவ்வாய் -- சகோதரன்

சந்திரனுக்கு அடுத்த நிலையில் பூமிக்கருகிலுள்ள கிரகம் செவ்வாய். பூமியைப் போன்றே செவ்வாயும் சூரியனைச் சுற்றிவரும் ஒரு கோள். விடியற் காலையும், சூரியன் மறைந்த பின்னும் இதனை வானத்தில் பார்க்கலாம். இது மகரத்தில் உச்சமும் கடகத்தில் நீச்சமும் பெறுகிறது. நல்ல உடல்நிலையையும், துணிவையும் கொடுக்கும் செவ்வாய், சகோதரகாரகன், அங்காரகன், மங்கல காரகன் என்றும் கூறப்படுகிறது. சோதிடத்தில் செவ்வாய் சகோதரனைக் குறிக்கிறது. இதற்குரிய எண் 9. பவளம், சிவப்புக் கற்கள் இதற்குகந்தவை.

புதன் -- தாய்மாமன்

புதன், சூரியனுக்கு மிகவும் அருகாமையிலுள்ள கோள்; இது சந்திரனை விடப் பெரியது; பூமியைவிடச் சிறியது. சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் புதனும் ஒன்றாகும். இது இரட்டைப் பண்புகளை அளிக்கும். இது கன்னியில் உச்சமும் மீனத்தில் நீச்சமும் பெறுகின்றது. இது சொல்வன்மை, கல்வி, நகைச்சுவை, திறமை முதலியவற்றை ஜாதகருக்கு அளிக்கும்; இதனை 'வித்யா காரகன்' என்றும் கூறுவர்; இது சோதிடத்தில் தாய்வழி மாமனைக் குறிக்கும். இதற்குரிய எண் 5. பச்சை அல்லது மரகதக் கல் இதற்குகந்தது.

வியாழன் -- புத்திரன்

வியாழன், சூரியக் குடும்பத்திலுள்ள பெரிய பனிச்சிடும் கோள்; இது 12 ஆண்டிற்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வரும்; இரவில் இது பனிச்சிடுவதைப் பார்க்கலாம். ஆனால் சுக்கிரன், செவ்வாய் ஆகியவற்றைக் காட்டிலும் பனிச்சிடும் தன்மை இதற்குக் குறைவு. இது கடகத்தில் உச்சமும் மகரத்தில் நீச்சமும் பெறுகிறது. இது மக்கட்பேறு, தெய்வ பக்தி முதலியவற்றை ஜாதகருக்கு

அமைத்துக் கொடுக்கும். வியாழனை குரு, புத்திரகாரகன் என்றும் சொல்லுவர். இதற்குரிய எண் 3. புஷ்பராகக்கல் இதற்குரியது.

<u>வெள்ளி</u>

வெள்ளி இரம்மியமான துணைவன்; இது விடியற்காலையில் மிகவும் பளிச்சென்றிருப்பதைக் காணலாம். எல்லாக் கோள்களைக் காட்டிலும் இது மிகுதியாகப் பளிச்சிடும். இவ்வெள்ளி அன்பு தேவதையாகக் கருதப்படுகிறது. இது மீனத்தில் உச்சமும் கன்னியில் நீச்சமும் பெறுகிறது. மனைவி, இன்பம், ஆபரணம், செல்வம் ஆகியவற்றிற்குக் காரணமான இவ்வெள்ளி, சுக்கிரன், 'களத்திரகாரகன்' என்றும் கூறப்படுகிறது. இதன் எண் 6. கல்-வைரம்.

<u>சனி</u>

சனி, வியாழனைவிடச் சிறியது. இது பூமியிலிருந்து மிகவும் தூரத்தில் உள்ளது. இது சூரியனை ஒருமுறை சுற்றிவர $29\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகிறது. இது சராசரி ஒவ்வொரு இராசியிலும் $2\frac{1}{2}$ ஆண்டுகள் இருக்கும். இது துலாராசியில் உச்சமும் மேஷத்தில் நீச்சமும் அடைகிறது. சனி வாழ்வு, மரணம் இரண்டிற்கும் அதிபதியாயும், ஆய்ந்துணர முடியாத தொல்லைகளுக்குக் காரணமாயும் இருக்கும். இச்சனியை 'ஆயுள்காரகன்', 'எமன்' என்றும் கூறுவர். இதன் எண் 8. கல்-நீலக்கல்.

<u>இராகுவும் கேதுவும்</u>

இராகுவும் கேதுவும் முறையே பாம்பின் தலையையும் வாலையும் குறிக்கின்றன. பிற கோள்களைப் போல இவை தனிப்பட்ட கோள்கள் அல்ல. எல்லா நேரங்களிலும் இவை ஒன்றுக்கொன்று நேர் எதிரில் இயங்கும். சூரியனுடைய பாதையும் சந்திரனுடைய பாதையும் வானவெளியில் இருந்து பார்ப்பதற்கு ஒன்றையொன்று இரு இடங்களில் வெட்டிக்கொள்வது போலத் தோன்றும். அதாவது, இரண்டு இடங்களில் சந்திரனுடைய சுற்றுப்பாதை சூரியனுடைய சுற்றுப்பாதையை இரண்டு புள்ளிகளில் வெட்டுகிறது. இந்த இரு புள்ளிகளுக்கும் சரியாக 180°

வித்தியாசம் இருக்கும். இந்த இரு புள்ளிகள் இராகு, கேது எனப்படுகின்றன. இவை எப்பொழுதும் பின்னோக்கி நகர்வன. இவற்றைச் 'சாயா கிரகங்கள்' என்றும் அழைப்பர்.

தந்தைவழி உறவு, கடற் பிரயாணம், அவமானம் ஆகியவற்றைக்குறிக்கும் இராகுவைப் 'பிதா மாதுர்க்காரகன்' என்றும் கூறுவர். தாய்வழி உறவு, பிறவித் துன்பத்தை அளிக்க வழிசெய்தல் முதலியவற்றிற்குக் காரணமான கேதுவை 'ஞானகாரகன்' என்றும் அழைப்பர்.

பன்னிரண்டு இராசிகள்

மேற்கூறிய சோதிடப் பிரிவுகள் எல்லாவற்றிலும், குறிப்பாகப் பிறந்த காலத்திற்குரிய சோதிடத்தில் இடம்பெறுகின்ற 12 இராசிகளின் பாகுபாடும் அவற்றின் தன்மையும் அறிதல் இன்றியமையாதது. எனவே, அவற்றின் தன்மைகளைப் பற்றி விரிவாக இங்கு அறிவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

பூமியைச் சுற்றியுள்ள 360° பாகைகளைக் கொண்ட ஒரு மாபெரும் வானவெளிவட்டம், அதாவது சூரியன் பூமியைச் சுற்றி வருவதைப் போன்று தோன்றுகிற பாதையின் இரு புறங்களில் 7½° பாகை அளவில் இடம்பெறுகின்ற விண்மீன்களின் பகுதி இராசிமண்டலம் எனப்படுகிறது. இந்த 15° பாகை அளவு பகுதியில் கோள்கள் சுற்றி வருகின்றன. இப்பகுதி 12 சம பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவை: 1. மேடம் (மேடம்), 2. ரிடபம் (இடபம்), 3. மிதுனம், 4. கடகம், 5. சிம்மம், 6. கன்னி, 7. துலாம், 8. விருச்சிகம், 9. தனுசு, 10. மகரம், 11. கும்பம், 12. மீனம் ஆகியன.

இந்த ஒவ்வொரு பாகமும் இராசிகள் எனப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் 30° பாகைகளைக் கொண்டுள்ளன. இந்த 12 இராசிகளுக்கும் அவை குறிக்கின்ற தன்மைகள், பொதுநிலையில் கூறப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட இடத்தில் கிழக்குத் திசையில் நின்று அடிவானத்தை நாம் பார்க்கும்போது,

வானமும் பூமியும் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். இந்த அடிவானத்திலிருந்து ஒவ்வொரு இராசியும் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக உதயமாகிக்கொண்டு வரும். இங்ஙனம், 24 மணி நேரத்தில் 12 இராசிகளும் உதயமாகி முடிவடைந்துவிடும்.

இலக்கினம்

பிறந்த நேரம், பிறந்த இடம் (அதாவது அந்த இடத்தின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை) இவற்றைப் பொருத்து ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட பாகையில் உதயமாகும் இராசி 'இலக்கினம்' எனப்படுகிறது. மேஷம்முதல் மீனம்வரையிலான ஒவ்வொரு இராசியும் இலக்கினமாக அமையும்போது அவை ஒவ்வொன்றும் ஒரு தன்மையைக் குறிக்கும். ஒருவர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிறக்கும்போது மேற்கூறியபடி அந்த நேரத்தில் உதயமாகும் இராசி அவருடைய 'உதய இலக்கினம்' அல்லது 'இலக்கினம்' என அழைக்கப்படுகிறது. மேஷம்முதல் மீனம் வரையிலான ஒவ்வொரு இராசியும் இலக்கினமாக அமையும்போது அவை ஒவ்வொன்றும் குறிக்கின்ற தன்மைகள் கீழ் வருமாறு அமைகின்றன.

1. மேஷம்

இராசி மண்டலத்துள்ள முதல் இராசி மேஷ இராசி. இது 0–30° பாகைகளையுடையது; செவ்வாய் இந்த இராசிக்கு அதிபதி. இது நெருப்பைப் போன்ற தன்மையுடையது; மனித உடலில் தலையையும் முகத்தையும் இது குறிக்கிறது. இதில் பிறந்தவர் குண்டாக இல்லாமல் கட்டு மஸ்தான உடல் பெறுவர்; சற்று நீண்ட கழுத்தையும் முகத்தையும் உடையவர்; நெற்றிப் பகுதி விரிந்தும், கன்னம் குழிந்தும் உள்ள முகத்தை உடையவர்; தைரியசாலி; குறிக்கோளுடன் சுறுசுறுப்பாகச் செயல்படுபவர்; இலக்கினமானது கோள்களின் நிலையால் பாதிக்கப்படும்போது, இவர் வம்புச் சண்டைக்குப் போவார்; எல்லாவற்றிலும்முன்னிருந்து நடத்தவேண்டும் என்ற எண்ணம் உடையவர்; பிறர் ஆலோசனையை ஏற்கமாட்டார்; எண்ணத்திலும்

செயலிலும் தலைவராக இருக்க விரும்புபவர்; இலக்கினம் பிற கோள்களின் சாதகமான பார்வையைப் பெறும்போது இந்தச் சின்னத்தினர், பிறரை நல்லமுறையில் நடத்திச் செல்லக்கூடிய தலைவர்களாவர்; திறமைசாலி; வாய்ப்புகளை ஏற்படுத்தி ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வர்; நிறைய எண்ணங்களையும், அவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற ஆசையும் கொண்டவர்; அவசரச் சூழல்களைச் சமாளிக்கக் கூடியவர்; தம் ஆசைகளைப் பிறருக்காகத் தியாகம் பண்ணமாட்டார்; நம்பிக்கை, அகந்தை கொண்டவர்.

<u>உடல்நலம்</u>

பொதுவாக நல்ல உடல்நலமுடையவர்; தடுப்புச் சக்தியுடையவர்; ஆனால், அடிக்கடி சிறுசிறு விபத்துகளுக்கு ஆளாவார்; குறிப்பாகத் தலைப்பகுதியில் காயம் அடைவார்; வேகம், சக்தியுடையவராதலால் ஓட்டப்பந்தயக்காரராகவும், விளையாட்டு வீரராகவும் திகழ்வார்; தலைவலி, தீக்காயம், வீக்கம், மூளை பாதிப்பு, அடிக்கடி காய்ச்சல், வாதம், அம்மை போன்ற நோய்களால் அவதியுற நேரிடும்.

<u>பொருளாதாரம்</u>

பொருள் ஈட்டவும் அதே சமயம் செலவு செய்யவும் விரும்புபவர்; நாளைய தினத்தைப் பற்றிக் கவலை கொள்ளார்; வரவு செலவைச்சமநிலையில் வைத்துக் கொள்ளார்; செலவு, சேமிப்பு பற்றிப் பிறருக்கு ஆலோசனை அளிப்பார்; ஆனால் தான் பின்பற்றமாட்டார்.

<u>காதல்/திருமணம்</u>

காதல் திருமணங்களில் ஆர்வமுடையவர்; இவர்களுடைய கவர்ச்சி எதிர்பாலினரைக் கவரும்; தீராத அன்பை விரும்புவர்; ஆதிக்கம் செய்யக்கூடிய தன்மை குறையும்போது மகிழ்ச்சியுடன் இருப்பர்.

மேடத்தில் பிறந்த பெண்கள் நகைச்சுவை உணர்வும் சுயசிந்தனையும் உடையவர். கோள்களால் பாதிக்கப்பட்ட மேடப் பெண்கள் தோற்றத்தில்,

இல்வாழ்வில் அகந்தையை வெளிப்படுத்துவர்; பொறாமையுடையவர்; கணவன் தனக்குச் சேவை செய்ய வேண்டுமெனவும், தன்னைப் புகழவேண்டும் எனவும் விரும்புவர்; தன்னை உயர்த்திப் பேசக்கூடிய ஆண்களை மட்டும் விரும்புவர்; எளிய கணவனைப் பெற்றவள் அவனை ஆட்டிப் படைப்பாள்; சிம்மம் அல்லது தனுசு இராசி கொண்ட ஆண் மேஷப் பெண்களுக்குத் தகுந்த இல்லறத் துணைவர்களாக அமைவர்.

தொழில்

இராணுவ அதிகாரி, வீரர், பாதுகாப்புத் துறையில் பணிபுரிபவர், அறுவை சிகிச்சை வைத்தியர், சவரத்தொழில் செய்பவர், காவல் துறையினர், பொற்கொல்லர், தையல்காரர், இரும்புப் பட்டறையில் பணிபுரிபவர், தச்சுத் தொழில் செய்பவர், தொழிற் சாலையில் பணிபுரிபவர், சுண்ணாம்பு - செங்கல் தொடர்பான தொழில் செய்பவர் போன்ற பல தொழில்களை மேஷத்தில் பிறந்தவர் செய்வர்.

2. ரிஷபம்

இது இராசி மண்டலத்தில் இரண்டாவதாக உள்ளது; இது 30-60° வரையிலான பாகைகளையுடையது; இதற்கு அதிபதி சுக்கிரன்; காளைச் சின்னத்தால் குறிக்கப்படுகிறது.

கருமையான மயிரும், பளிங்குக் கண்களும் உடையவர்; விரிந்த தோள்களையும் திரண்ட தசைகளையும் கொண்டவர்; பூமிக்குரிய, மண்ணுக்குரிய பண்புகளைக் கொண்ட ரிஷபச் சின்னத்தினர் பொறாமை மிக்கவர்; பூமியைப் போன்று பொறுமையுடையவர். ஆனால், கோபப்பட நேரிட்டால் நில நடுக்கம் ஏற்படுவதுபோன்று வெடித்து விபரீதத்தை ஏற்படுத்திவிடுவர். மனவலிமை, வாய்த்திறமை, வாக்குப்பலிதம், பேச்சுத் திறமை உடையவர்; அறிவு, உள்ளுணர்வு உடையவர்; நீண்டகாலத் திட்டங்கள் போடுவதில்வல்லவர்; உணவு உண்பதில், செயல்களைச் செய்வதில் நிதானம் காட்டுவர்.

உடல்நலம்

பொதுவாக இவர்களுக்கு நல்ல உடல்நலம் இருக்கும்; சிறந்த மனித பலம் உடையவர்போன்று தோன்றுவர்; நோய் வாய்ப்படின் நோயை வெளிப் படுத்தாமல் சிறிதுகாலம் தனக்குள்ளேயே அனுபவிப்பர்; நோயின்று விரைவில் குணம்பெற இயலாது; தொண்டை, நாக்கு, கழுத்து முதலிய தொடர்பான நோய்களும், முதுமைக் காலத்தில் மலச்சிக்கல், கண் நோய் போன்றவையும் ஏற்படும்.

பொருளாதாரம்

நல்லமுறையில் பொருள் ஈட்டுவர்; தேவையறிந்து செலவு செய்வர்; சூதாட்டம், அதிர்ஷ்டம் போன்றவற்றில் நம்பிக்கையற்றவர்; ஆனால், இவற்றால் இவருக்கு அனுகூலமான பலன்களும் கிடைக்கும்; பழமரத் தோட்டம், தேயிலைக் காப்பித் தோட்டங்கள் போன்றவற்றில் முதலீடு செய்வர்; தரகராகவும் வங்கித் தொழில் செய்பவராகவும் இருப்பர்.

காதல்/திருமணம்

காதல் மற்றும் திருமண வாழ்வில் உண்மையாகவும், நேர்மையாகவும் இருப்பர்.

தொழில்

ரிஷபத்தில் பிறந்தோர் வாழ்க்கையை வசதியாக, முழு அளவில் அனுபவிக்க விரும்புவர்; எனவே, நல்ல வருமானம் தரும் தொழிலையே நாடுவர்; ஆடம்பர, பகட்டுப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், உயர்ந்த கற்கள், ஆபரணங்கள் முதலியன தொடர்பான வணிகத்தில் அல்லது தொழிலில் ஈடுபடுவர்; வங்கித் தொழில், நிறுவன மேலாண்மை அதிகாரி, காசாளர், தரகர், தோட்டக்காரர், விவசாயி போன்றவற்றைச் செய்பவராக இருப்பர். இசை, நடனம், திரைப்படம் தொடர்பானவற்றில் தன்னை

ஈடுபடுத்திக் கொள்பவர். சட்டத்துறை, வருமான வரித்துறை, ஆடம்பரப் பொருள்கள்தயாரிப்புத் துறை போன்றவற்றிலும் பணிபுரிவர். கணித ஆசிரியராக, பொறியியல் வல்லுநராக இருப்பர்.

3. மிதுனம்

மிதுனம், இராசி மண்டலத்தில் மூன்றவதாக உள்ள சின்னம். இது 60-90° வரையான பாகைகளை உடையது. இதன் அதிபதி புதன். குழந்தை உருவத்தால் மிதுனம் குறிக்கப்படுகிறது. இந்தச் சின்னத்தில் பிறந்தவர் மனதளவில் வாழ்பவர்; கவனக்குறைவுடையவர்; மகிழ்ச்சியையும் மாற்றங்களையும் விரும்புவர்; எப்பொழுதும் படிக்க விரும்புவர்; பிறரை நிருவாகிப்பதில் ஆற்றல் குறைந்தவர்; அடிக்கடி பயணம் செய்வதில் விருப்பமுடையவர்; முடிவெடுப்பதில் காலதாமதம் செய்பவர்; இரட்டை எண்ணம் உடையவர்; எடுத்த காரியம் நிறைவேறுவதற்குமுன்பே அடுத்த செயலில் ஈடுபடுபவர்; இளகிய மனத்தர்; தயக்கமுடையவர்.

உடல்நலம்

பொதுவாக, மிதுனக்காரர் மனத்தளவில் சுறுசுறுப்பானவர்; உடல் நலத்தைத் தேவையற்ற கவலைகளாலும், ஆர்வத்தினாலும் கெடுத்துக்கொள்வர்; மனச்சிந்தனை இவர்களால் தவிர்க்கப்படும்போது ஆரோக்கியமானவராய் இருப்பர்; கடுமையான வேலைகளைச் செய்யத் தயங்குவர்; நன்றாக ஓய்வு பெற்றும் நன்றாகத் தூங்கியும் ஆரோக்கியம் பெறக் கூடியவர். சளி, நெஞ்சுசளி, காசநோய், தோள்களில் வலி அல்லது குறை, மூலம், சிறுநீர்ப்பைக் குறைகள் போன்றவற்றால் இவர்கள் சிரமப்பட வேண்டிவரும்.

பொருளாதாரம்

பொருவாதார மாற்றங்கள் மிகுதியாக ஏற்படும்; நல்ல யோக காலத்தில் வாழ்வை நன்கு அனுபவிப்பர்; கணவன்/மனைவியால் ஏற்படும் அதிர்ஷ்டத்தைப் பொருத்தும் இவர்களின் பொருளாதாரம் அமையும். குடும்பச் சண்டை, சச்சரவு போன்ற சிக்கலுக்குள்ளாவர்; தந்தையுடன் ஒத்துச் செல்லமாட்டார். இவரது வீழ்ச்சிக்கு இவரே காரணமாவார்.

காதல்/திருமணம்

விரைவில் நட்புக் கொள்வர். விரைவில் குற்றம் காண்பர். திருப்தி கரமான நண்பரை அடைய விரும்பித் தோல்வியடைவர்; காதல் தொடர்பான வாழ்க்கையை விரும்புவராகவும், காதல் வாழ்வின்மூலம் இன்பமடைபவராகவும் இருப்பர்; திருமணம் என்பது இவர்களுக்கு உணர்ச்சிப் பூர்வமானதாயும், ஆர்வமிக்கதாயும் இருக்கும்; அனுசரித்து நடக்கும் துணையைப் பெறும்போது அதிர்ஷ்டம் உடையவராகிறார், சம அறிவுடைய துணையைப் பெறும்போது மண வாழ்க்கை வெற்றிகரமாய் அமையும். சிறுசிறு பயணங்கள் மேற்கொண்டு இருவரும் வாழ்க்கையை நல்முறையில் அனுபவிப்பர். புதிய சூழ்நிலைகளிலும் வாழ்வை அனுபவிக்க விரும்புவர்.

தொழில்

குமாஸ்தா, உதவியாளர், விற்பனையாளர், முகவர், விரிவுரையாளர், பதிப்பாசிரியர், செய்தியாளர், இதழாசிரியர், பொறியியலாளர், ஆசிரியர், பேராசிரியர், நிழற்பட நிபுணர், செயலாளர், மொழிபெயர்ப்பாளர், காசாளர், புத்தக வியாபாரி, தூதராலயத்தில் பணிபுரிவோர், பேச்சாளர் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபடுவர்.

4. கடகம்

இது இராசி மண்டலத்தில் 4 ஆவது சின்னம். இது 90-120° பாகைகளைக் கொண்டது; இதன் அதிபதி சந்திரன்; நண்டு, கடகத்தைக் குறிக்கும் சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது. செம்பட்டை முடியும், தோள்கள் அகன்றும் வயிறு பாகம் பருத்தும், நல்ல பற்களைப் பெற்றும் கடகத்தில் பிறந்தவர் இருப்பர்; கற்பனையால் மகிழ்ச்சியடைவர்; விரைவில் பிறர் எண்ணங்களைப் புரிந்து அதன்படி செயல்படுவார்; மிருதுவாகப் பேசுவர்; பொது மக்களிடம் மதிப்பையும், செல்வாக்கையும் பெற விரும்புவர்; முன்கோபம் அடிக்கடி தோன்றி விரைவில் மறையும்; வீடு, குடும்பம் முதலியவற்றை நேசிப்பார்.

கடகத்தில் பிறந்த பெண்கள் சோம்பலின்றி உழைப்பர்; பணம் ஈட்டிச் சொத்து, சுகங்களை அடைவர்; சூழ்நிலைக்குத் தக்கவாறு தம்மை மாற்றிக் கொள்வர்; கண்ணியமானவர்; புகழ் பெறுவர்.

உடல்நலம்

இளமையில் பலம் குன்றியவராய் இருந்து வயது செல்லச் செல்ல ஆரோக்கியததைப் பெறுவர்; கவலைகளால் உடல் உபாதைகளை ஏற்படுத்திக் கொள்ளுவர்; ஜீரணக்கோளாறு, ஆஸ்த்துமா, வாயுத் தொந்தரவு, தொண்டைக் குறைகள், குடிப் பழக்கத்தால் ஏற்படும் வியாதிகள், மஞ்சள் காமாலை போன்ற வியாதிகளால் துன்புறுவர்.

பொருளாதாரம்

ஆடம்பரச் செலவை விரும்ப மாட்டார்; பணத்தையும், செல்வத்தையும் மதிப்பார்; தம் முயற்சியால் பொருளீட்டிச் செல்வம் சேர்ப்பார்.

காதல்/திருமணம்

காதல்/திருமண வாழ்விற்காகத் தங்களுடைய அனைத்துச் சுகபோகங்களையும் விட்டுக்கொடுத்து அன்பு காட்டுவர்; இவர்களுக்கு நல்வாழ்வைத் திருமணம் அமைத்துக் கொடுக்கும்; கடகப் பெண்கள் கணவரிடம் நேர்மையாக, உண்மையாக, அன்பாக இருப்பர்.

தொழில்

உணவு விடுதி, காப்பி, தேநீர், . மளிகைக்கடை, பழ வியாபாரம், செவிலியர், மேலாளர், தொழில்துறை செயலாளர், வரலாற்றாசிரியர், தொல்பொருள் துறை, பவளங்கள், மீன் தொடர்பான தொழில்கள், கப்பல்துறை, ஏற்றுமதி இறக்குமதித் துறை, போக்குவரத்து, போதகர், புகழ்மிக்க ஆலோசகர், அமைச்சர் போன்ற பல நிலைகளில் இவர்களது பணியமையும்.

5. சிம்மம்

சிம்மம், இராசி மண்டலத்தில் 5 ஆவது சின்னம். இது 120-150° பாகைகள் கொண்டது. இதற்கு அதிபதி சூரியன். இது சிங்கத்தின் உருவத்தால் குறிக்கப்படுகிறது.

சிம்மத்தில் பிறந்தவர் அகலமான நெற்றியும், தோள்களும் உடையவர்; உடற்கட்டு நன்கு அமைந்திருக்கும்; அசிங்கமாக இருக்கமாட்டார்; கம்பீரமான தோற்றமும், பெரிய மனதும், பெருந்தன்மையும் உடையவர்; அனைத்து உயிர்களுக்கும் உதவியாக இருப்பர்; அரசினால் கிட்டும் அனைத்து உதவிகளையும் பெறுவர்; நன்பரிடமும், உறவினரிடமும் நம்பிக்கையுடையவர்; பிறருடைய தவறுகளை மறந்து மன்னிப்பர்; பிறர் குறைகளைப் பெரிதுபடுத்தமாட்டார்; பிறர் புகழ்ச்சியினால் மகிழ்ச்சியடைவர்; நல்ல வளர்ச்சித் திட்டங்களைக் கொடுக்கவல்லவர்; அதிகாரத்தை விரும்புவர்; பெருமைப்படுத்திக் கொள்வர்; குறிக்கோளுடன் கவுரமுடன் வாழ்வர்; வாழ்வில் தலைமையிடத்தைப் பெறுவர்; விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டுவர்; மனபலம் பெற்றவர்; விடாப்பிடியான முயற்சியினால் வெற்றி காண்பர்; அரைகுறை மனத்துடன் எதையும் செய்யார்.

உடல்நலம்

பொதுவாக இவர்கள் நல்ல உடலமைப்பைப் பெற்றிருப்பர்; உடல் நலம் குன்றினும் விரைவில் தேறிவிடுவர்; நோய்வரும் முன்னே உஷார் ஆகி விடுவர்; இருதயநோய், இருதயத் துடிப்பு, முதுகெலும்புக் குறைபாடு, வீக்கங்கள், மயக்கம் போன்ற நோய்களால் அவதியடைவர்.

பொருளாதாரம்

பொதுவாகச் சிம்ம இராசிக்காரர் தேவையான அளவிற்குப் பொருளாதார வளம்பெற்று இருப்பார்; ஊதாரித்தனமான செலவிலும், சூதாட்டத்திலும் நாட்டமுடையவர்; சூதாட்டத்தில் லாபமும் அடைவர்; மற்றவர் தன்னிடமிருந்து பண உதவி பெறும்போது அதைப் பெருமையாக நினைத்துக் கொள்வர்.

காதல்/திருமணம்

நாடகத்திற்குச் சிறப்புப் பகுதி இருப்பதுபோல், தம் கணவரை/காதலரை மிகவும் மகிழ்ச்சியுறச் செய்வர்; மற்றவரால் கவர்ச்சியால் இழுக்கப்படுவர்; பெண்களின் கூட்டத்திற்கு நடுவில் அதிகம் காணப்படுவர்.

அம்மப் பெண்மணி உயர்ந்த குறிக்கோள் உடையவர்; தம் கணவனுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துக் கொள்வர்; மிகுதியான அன்பைக் கணவன்மீது காட்டுவர்; குழந்தைகளை மிகவும் நேசிப்பர்; குழந்தைகளால் பெருமையடைவர்; அறனுத்த இயல்புடைய குழந்தைகளைப் பெறுவர்.

தொழில்

நடுத்தர வருமானமுடைய அரசாங்கத்துறை, வர்த்தகத்துறை போன்றவற்றில் பணிபுரிவர்; தலைவராக, மேலாளராக, இயக்குனராக, கண்காணிப்பாளராக, பொறியாளராக, நிருவாகியாக இருப்பர்.

6. கன்னி

கன்னி, இராசி மண்டலத்தில் 6 ஆவதாக உள்ள சின்னம். இது 150-180° வரையான பாகைகளுக்குரியது. இதன் அதிபதி புதன். இது பெண்ணின் உருவத்தால் குறிக்கப்படுகிறது.

கன்னியில் பிறந்தவர் நல்ல கருமைநிற மயிரையும், கண்ணையும் உடையவர்; சன்னக் குரலில் பேசுவர்; வேகமாக நடப்பர்; தொந்தி இருக்காது; உண்மை வயதைக் காட்டிலும் இளமைத் தோற்றம் உடையவர்; நேர்மையானவர்; எப்பொழுதும் மாற்றத்தை விரும்பக் கூடியவர்; இருப்பிடங்களையும் தங்கும் இடங்களையும் வேலையையும் மாற்றிக் கொள்வர்; தீட்டிய திட்டங்களைக் காலத்துடன் செய்வர்; சுறுசுறுப்பாக வேகமுடன் செயல்படுவர்; எதையும் முறையாகச் செய்ய விரும்புவர்; அறிவுடனும் கவனமுடனும் திறமையாகச் செயல்படுவர்; எதிலும் ஆழமாக உடனுக்குடன் செயல்படுவர்.

உடல்நலம்

கன்னிச் சின்னம் இராசி மண்டலத்தில் வைத்திய சாலையைக் குறிக்கிறது. பொதுவாக இவர்கள் நல்ல சுகமுடன் இருப்பர்; வயதுக் காலத்திலும் ஆரோக்கியம் இருக்கும்; உணவுக் கட்டுப்பாடுடையவர்; ஆனால், உடல்நலம் குன்றும்போது மனபலத்தை இழப்பர். எனவே, நோயைவிட மனம் துன்பத்தை மிகுதிப்படுத்தும் உடல்நலம் குன்றியவர்க்குச் சேவைபுரியும் மனப்பாங்குடையவர். சீரணக்கோளாறு, உடல்வாதனைகள், டைப்பாய்டு, விட்டுக் காய்ச்சல், நரம்புக்கோளாறுகள், மனக் கலக்கங்கள் போன்ற நோய்கள் இவர்களைத் தாக்கும்.

பொருளாதாரம்

பண விசயங்களில் கவனத்துடன் செயல்படுவர்; செல்வந்தர் ஆக விரும்புவர்; பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து சேமிப்பர். ஆனால், இவர்களுடைய கடின முயற்சிக்குத் தகுந்த பண வரவு இருக்காது; இவர்களுடைய திறமையாலும் கடின உழைப்பாலும் மேன்மைக்கு வருவர்.

காதல்/ திருமணம்

பொதுவாக நல்ல மகிழ்ச்சிகரமான திருமண வாழ்க்கை நடத்துவர்; காலதாமதமாய் மணம்புரிந்துகொள்வர்; துணையைப் புரிந்துகொண்டு மனம் ஒத்துக் கடமை தவறா வாழ்க்கை நடத்துவர்.

கன்னியில் பிறந்த பெண், இல்வாழ்க்கையில் ஒவ்வொன்றும் சரியாக நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தையுடையவள்; சிக்கனமாகச் செலவு செய்வாள்; தானோ, பிறரோ வீணடிப்பதை விரும்பமாட்டாள்; தன் கடமைகளைத் திருப்தி கரமாகச் செய்வாள்.

தொழில்

பொறியாளர், கணக்காளர், ஆசிரியர், விஞ்ஞானி, அச்சுத்தொழில், குமாஸ்தா, தரகர், சட்ட நிபுணர், பத்திரிகை ஆசிரியர், இசையமைப்பாளர், கலைஞர் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபடக் கூடியவர்கள்.

7. துலாம்

துலாம், இராசி மண்டலத்தில் 7 ஆவது சின்னம். இது 180-210° பாகைகளைக் கொண்டது; இதற்கு அதிபதி சுக்கிரன். இதன் சின்னம் தராசு.

துலாத்தில் பிறந்தவர் உயரமான தோற்றமுடையவர்; வலிமையான தோளையுடையவர்; கருணைப் பார்வையுடையவர்; புத்திசாலி; நல்லதையும் கெட்டதையும் ஆராய்ந்து உணரக் கூடியவர்; எப்பொழுதும் மகிழ்ச்சியான ஆனந்தமான வாழ்க்கைக்கு முயற்சி செய்வர்; நேர்மையானவர்; இளகிய மனத்தினர்; ஆடை, இசை, வாசனைப் பொருள், ஆடம்பரப் பொருள், போன்றவற்றை விரும்புவர்; பிறருக்காக உழைக்க வல்லவர்; கற்பனை உள்ளம் படைத்தவர்; ஆன்மிக வாழ்க்கையில் நாட்டமுடையவர்; இல்லற வாழ்க்கை இன்பத்தையும் வாழ்வையும் நன்கு அனுபவிப்பர்.

உடல்நலம்

பொதுவாக உடற்கட்டு நன்றாக இருக்கும்; தொத்துவியாதிகளுக்கான தடுப்புச் சக்தியைக் குறைவாகப் பெற்று இருப்பர்; ஒருசில தொத்து வியாதிகளினாலும் பாதிக்கப்படுவர்; சிறுநீரகங்கள், வயிற்றின் அடிப்பாகங்கள், இடுப்பு, கருப்பை தொடர்பான நோய்களால் பாதிக்கப்படுவர்.

பொருளாதாரம்

பங்குதாரருடன் சேர்ந்து செய்யும் தொழில் இவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

காதல்/திருமணம்

காதல்/திருமண வாழ்வில் இவரைச் சிறந்தவராகக் கருதலாம். தங்களுடைய உண்மையான அன்பினால் தன் துணையின் மனத்தைக் கவர்ந்துவிடுவர்; அவ்வெதிர் பாலினருடன் வாழ்க்கையை நல்லமுறையில் பகிர்ந்துகொள்வர்;

இனிய சிரிப்பால் பிறரைக் கவரக் கூடியவர்; விரைவில் மணம்புரிந்து கொள்வர்.

துலாத்தில் பிறந்த பெண் புத்திசாலி; தந்திரமிக்கவர்; விவாதங்களை விரும்பமாட்டாள்; அமைதியை நிலைநாட்ட முயற்சிப்பர்; பகட்டான வாழ்க்கை நடத்துவர்; துணைவரிடம் அன்பு காட்டுவர்.

தொழில்

கப்பல் படையில் பணிபுரிபவர், சட்டநிபுணர், வேதியியலாளர், பொறியாளர், நீர் மின்சார அறிஞர், உணவு, பழரசம் தொடர்பான வேலைகளில் பணிபுரிபவர், பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, முகவர், விற்பனை அதிகாரி போன்ற தொழில்களில் ஈடுபடுவர்.

8. விருச்சிகம்

விருச்சிகம், இது இராசி மண்டலத்தில் 8 ஆவது சின்னம். இது 210°-240° பாகைகள் கொண்டது. இதன் அதிபதி செவ்வாய்; தேள் உருவத்தால் இது குறிக்கப்படுகிறது.

விருச்சிகச் சின்னத்தில் பிறந்தவர் பொதுவில் நல்ல உடலமைப்பு உடையவர்; சராசரி உயரத்தைக் காட்டிலும் உயரமானவர்; அகலமான முகத்தை உடையவர்; நீளமான கைகளும் சுருட்டை முடியும் உடையவர்; விட்டுக் கொடுத்துச் சரணடையும் மனப்பான்மையற்றவர்; புத்திக் கூர்மையுடையவர்; எடுத்த வேலையை விடாமுயற்சியுடன் முடிக்கும் ஆற்றல் உடையவர்; தைரியமுள்ளவர்; தனக்கென விருப்புவெறுப்புடையவர்; நோய் அறியும் வைத்தியராகவும் செயல் படுவர்; தனித்து நின்று துணிச்சலுடன் போராடக் கூடியவர்; முன்கோபி, கோபத்தால் வெறுப்படைவர்; குடிப் பழக்கத்தையும் மேற்கொள்வர்; சில நேரங்களில் தம் அவசர காரியங்களால் அடைய வேண்டிய புகழை இழப்பர்; வீண் பேச்சையும் மிரட்டுவதையும் விரும்பமாட்டார்; இரகசியத்தைப் பாதுகாக்கக் கூடியவர்; நம்பிக்கைக்கும் உண்மைக்கும் பாத்திரமாக இருப்பினும் பிறரால் பாதிக்கப்படும்போது பழிவாங்கும் எண்ணமுடையவர்.

உடல்நலம்

பிறப்பு உறுப்பு, கருப்பை, சிறுநீர்ப்பை, தொடர்பான நோய்கள், கற்களால் உண்டாகும் உபாதைகள், வீக்கம், மூளைக்கோளாறு போன்ற நோய்களால் தாக்கப்படுவர்.

பொருளாதாரம்

பணம், செல்வத்தைப் பொருத்தவரையில் சிறிது அதிர்ஷ்டமுடையவர்; சூதாட்டத்தில் வெற்றியும் பெறுவர்; பெரிய அளவில் வருமானம் அமையும்; பொருள் ஈட்டுவதில் வல்லவர்; செலவாளியும் கூட.

காதல்/திருமணம்

எதிர்பாலினரிடமிருந்து புகழ்மொழி பெறும்போது மட்டற்ற மகிழ்ச்சியுடன் உலக வாழ்வை விரும்புவர். ஆனால், இவரது குறையை அவர்கள் சுட்டும்போது வெறுப்படைவர்; மற்றபடி தன் துணைக்கு அனைத்து வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்து மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வர்; இவர் விரும்பத்தக்க துணையை அடைவர்.

விருச்சிகப் பெண்கள் தம் கணவரின் அன்பையும் ஆதரவையும் அடையும்போது, வாழ்க்கையை நன்கு அனுபவிப்பர்; அமைதியான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வர்; சில பெண்கள் கணவரை வெறுத்துத் தள்புறத்துவர், இதுபோலவே சில விருச்சிக ஆண், மனைவியை வெறுத்துத் தள்புறத்துவர்.

தொழில்

வைத்தியர், பொறியாளர், வேதியியலாளர், ஆய்வாளர், போர் வீரர், மிருகங்களை வெட்டுபவர் போன்ற வேலைகளில் பணிபுரிவர்; இயந்திர வாகனங்கள், இராணுவம், அலைக்கட்டுமானம், தேயிலை, காப்பி, புகையிலை முதலியன தொடர்பான தொழில்களிலும் ஈடுபடுவர்.

9. தனுசு

தனுசு, இராசி மண்டலத்தில் 9 ஆவது இடமாக உள்ளது. இது 240-270° வரையான பாகைகள் கொண்டது. இதன் அதிபதி வியாழன். இது வில் அம்பு சின்னத்தால் குறிக்கப்படுகிறது.

தனுசுவில் பிறந்தவர் சரிசமமான உடலமைப்புக் கொண்டவர். அகன்ற நெற்றி, நீளமான மூக்கு, பளிச்சிடும் கண்கள், கருணைப் பார்வை ஆகியன கொண்டவராக இருப்பார்; தைரியசாலி, குறிக்கோள் உடையவர்; தலைக்கனம் உடையவர்; உண்மையே பேச விரும்புவர்; தங்கள் கொள்கையிலேயே கடைசி வரை நிற்பவர்; தான் சரி என்று நினைப்பதை மற்றவரிடமும் நிலைநாட்டுவார்; உயர் கல்வியில் நாட்டமுடையவர்; தூரப் பயணங்களை விரும்புவர்; தத்துவம் பேசுபவர்; பெரிய மனதுடையவர்; ஆன்மிகத்தில் ஈடுபாடுடையவர்; விளையாட்டு வீரர்; புதிய எண்ணங்களுக்கு இடமளிப்பர்; சரியான உள்ளுணர்வுகளைப் பெறுவர்; அநீதி நடக்கும்போது போராடத் தயங்கமாட்டார்; எதிர்பாலினர் மத்தியில் இருக்க விரும்புவர்; அடிக்கடி தங்கள் எண்ணங்களை மாற்றி அமைத்துக் கொள்வர்.

உடல்நலம்

இடுப்பு, தொண்டைப் பகுதி தொடர்பான நோய்கள், நுரையீரல் தொந்தரவு, குடற் புண், சர்க்கரை வியாதி, ஆஸ்த்துமா போன்ற நோய்களைப் பெறுவர்.

பொருளாதாரம்

அடிக்கடி மாற்றங்களை விரும்புவர்; நிச்சயமற்ற முதலீடு, சூதாட்டம் போன்ற துறைகளில் இலாபம் அடையார். தனுசுக்காரர் விரைவாகச் செல்வந்தர் ஆவர்.

காதல்/திருமணம்

தனுசுப் பெண்ணை மணக்கும் ஆணை அதிர்ஷ்டக்காரர் எனலாம். காரணம்

ஒரு ஆண் எதிர்பார்க்கும் அனைத்துப் பண்பையும் அவளிடம் காணலாம்; கணவனுக்கு உதவுபவளாகத் தொந்தரவு செய்யாதவளாக இருப்பாள்; கோபமின்றி, புத்திசாலித்தனமாகச் செயல்படுவாள்; கணவன் தவறு செய்யும்போது பணிவுடன் ஆலோசனை தருவாள்; தனுசுக்காரன் முன்கோபி. ஆனால் கோபம் நீடிக்காது; பொழுது போக்கு மன்றங்களில், விளையாட்டுகளில் பெரும்பான்மையான நேரத்தைக் கழிப்பர்; எனவே, குடும்ப வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்காததுபோல் காட்டிக்கொள்வர்.

தொழில்

ஆசிரியர், பொதுப் பேச்சாளர், பதிப்பாசிரியர், விளம்பரம் செய்பவர், கணக்காளர், சட்ட நிபுணர், பொறியாளர் போன்ற பல்வேறு தொழில்களையுடையவராய் இருப்பர்; வங்கித் தொழில், மதச்சார்பான நிறுவனங்கள், அரசியல் போன்ற துறைகளிலும் ஈடுபடுவர்.

10. மகரம்

மகரம், இராசி மண்டலத்தில் 10 ஆவது சின்னம். இது 270-300° வரையான பாகைகளை யுடையது; இதன் அதிபதி சனி. இதன் சின்னம் திமிங்கலம் / கடல் குதிரை.

மகரத்தினர் பலம் குன்றியவராகவும், மெதுவாக உடல் வளர்ச்சி பெறுபவராகவும் இருப்பர்; நல்ல உடலமைப்பு இருக்காது; 16 வயதிற்குப் பின் உயரமாக வளரக் கூடியவர்; மெலிந்த முகத்தையும், நீண்ட மூக்கையும், உள்ளடங்கிய கண்களையும் பெற்றிருப்பர்; தலைமுடியானது கடினத்தன்மை பெற்றிருக்கும்; இடுப்புப் பகுதி பருத்துக் காணப்படுவர்.

எதிலும் கணக்குப் பார்ப்பர்; நடைமுறை மனத்தை உடையவர்; பிறரை நம்ப வைக்க முயற்சிக்க மாட்டார்; வீண் பேச்சை விரும்பமாட்டார். சிலர் சோம்பேறிகள். ஒவ்வொரு காரியத்தையும் பிறருடைய தூண்டுதலின்

பேரில்தான் செய்வர். எதையும் தாமதமாகச் செய்வர்; இவர்களுடைய செயல்களில் இடையூறுகள் ஏற்படும்; தண்ணீர் கிடைக்கும்வரை கிணற்றைத் தோண்ட முயற்சிப்பார். எந்த ஒரு செயலைச் செய்யினும் உடன் ஒரு துணை இருப்பதை விரும்புவர்; அரசியலில் செல்வாக்கு இருக்கும்; தேர்தலுக்குமுன் அனைத்தையும் நினைவில்கொண்ட இவர் தேர்தலுக்குப்பின் முழுமையாக மறந்து விடுவார். அரசியல் தந்திரமிக்கவர். பிறருக்குப் பயன்படும் வகையில் உதவக் கூடியவர்; சுயநலக்காரர். சில மகரக்காரர் நேர்மையற்று மோசமானவராகத் தலைக்கனம் பிடித்தவராக இருப்பர்.

உடல்நலம்

முழங்கால் பகுதிகள், எலும்பு, தோள், சீரணஉறுப்புகள், இருதயம், சளி தொடர்பான நோய்கள் ஏற்படும். எலும்பு முறிவாலும் பாதிக்கப்படுவர்.

பொருளாதாரம்

நிச்சயமற்ற முதலீடு, சூதாட்டம் போன்ற துறைகளில் ஆர்வமற்றவர்; பணத்தை வீண்செலவு செய்யாது விடாப்பிடியாகச் சிறுகச்சிறுகச் சேர்ப்பர். எதிர்காலத்தை நினைத்துத் திருப்திகரமாகச் சேர்த்து வைப்பர்.

காதல்/திருமணம்

அன்பு, பாசம் நிறைந்தவராய் இருப்பினும், அதை வெளிப்படுத்த மாட்டார். காதல், நடனம் போன்றவைகளில் நாட்டமற்றவர்; உணர்ச்சி வசப்படுபவர்; எதிர்பாலினரை நெருங்கும்போது மிகவும் முன்னெச்சரிக்கையுடனும், மெதுவாகவும் செயல்படுபவர்; வேகம் இருக்காது; தயக்கமுடையவர்; மகரப் பெண்கள் சிற்றின்பத்தில் மிகவும் தயக்கமுடன் செயல்படுவர்; பயமும் உடையவர்.

தொழில்

கடுமையான உழைப்பாளி; அரசாங்கப் பதவிகளை வகிப்பர்; சுரங்கங்கள் கனிமங்கள், உலோகம் தொடர்பான பொறியாளர், தயாரிப்பாளர், வைத்தியர்,

நாவலாசிரியர், துப்பறிவாளர், விஞ்ஞானி எனப் பல பணிகளில் இச்சின்னத்தினர் வேலை செய்வர்; தோல் தொடர்பான தொழில்கள், சிமெண்ட், செங்கல் தொடர்பான தொழில்கள், பொருளாதாரத் துறை, சட்டத்துறை, வேதியியல் துறை போன்ற தொழில்களில் ஈடுபடுவர்.

11. கும்பம்

கும்பம், இராசி மண்டலத்தில் 11 ஆவது சின்னம். இது 300–330° வரையான பாகைகளைக் கொண்டது. இதற்கு அதிபதி சனி. பொங்கி வழியும் குடம் இதன் சின்னமாக அமைகிறது.

பொதுவாகக் கும்பத்தினர் நல்ல தோற்றமுடையவர். உயரமான உடலமைப்பு உடையவர். பிறருடைய புகழ்ச்சியினால் ஏமாற மாட்டார். புத்திசாலி; பிறருடைய குணங்களையும் நோக்கங்களையும் அறியவல்லவர்; புதிய எல்லைகளை உணர்வதில் தாமதம் காட்டுவர்; நினைவாற்றல் உடையவர்; விழிப்புடன் செயல்படுவர்; அவர்களுக்கென எல்லைகளை வகுத்துக்கொண்டு அதன்படி செயல்படுவர்; தங்களுக்கெனத் தனிக் கொள்கையுடையவர்; ஆராய்ச்சி நோக்குடையவர்; தங்களுக்கென வலிமையான விருப்பு வெறுப்புகளையுடையவர்; உலக வாழ்வில் மிகுந்த ஆர்வம் காட்டுவர்; உள்ளுணர்வு, தியானம் போன்ற வற்றில் ஆர்வம் காட்டுவர்; தத்துவத்தைப் போதிப்பதைக் காட்டிலும் நடைமுறையில் பிகுதியாகச் செயல்படுத்துவர்.

உடல்நலம்

தொத்துவியாதி, பல் நோய், இருதய நோய், இரத்தமுத்தம், கைகால் வீக்கம், தோல்நோய், எலும்புமுறிவு, மலச்சிக்கல் போன்ற நோய்களை இவர்கள் பெறுவர்.

பொருளாதாரம்

பொதுவாகக் கும்பத்தினர் நவீன தொழில்களில் முதலீட்டுப் பயனடைவர்.

திறமையைப் பயன்படுத்திப் பணம் ஈட்டுவர். பணத்தின் தேவையை உணர்ந்தவர்; தாராளமாகச் செலவு செய்யமாட்டார்; அதற்காகக் கருமியாகவும் இருக்க மாட்டார்.

காதல்/திருமணம்

கற்ற, சம அளவு அறிவுள்ள வாழ்க்கைத் துணையை நாடுவர்; அவர்பால் மிகுந்த பற்றுடையவர்; மண வாழ்வை மகிழ்ச்சியாக அமைத்துக் கொள்வர். கும்பத்துப் பெண்கள் கணவருடன் மிகுந்த அளவு ஒத்துழைப்பர்; கணவனின் பொறுப்புகளில், வேலைகளில் உதவுவர்.

தொழில்

விஞ்ஞானி, நிருவாகத்தினர், விரிவுரையாளர், கட்டட நிபுணர், நாவிதன், புத்தக வியாபாரி, கணக்காளர், துப்பறிவாளர், வானியல் நிபுணர், போன்ற பணிகளைச் செய்வர்; மேலும் வேதியியல் பொறியியல் உலோகத் தொழில் போன்ற தொழில்களும் செய்வர்.

12. மீனம்

மீனம், இராசி மண்டலத்தில் 12 ஆவது சின்னம். இது 330-360° வரையிலான பாகைகளை உடையது; இதற்கு அதிபதி வியாழன்; இரு மீன்களின் சின்னத்தால் குறிக்கப்படுகிறது.

இச்சின்னத்தினர் குள்ளமாகக் குண்டாக இருப்பர்; முடி மிருதுவாக இருக்கும்; தத்துவவாதி; எப்பொழுதும் கற்பனையும் கனவுகளும் கொண்டு இருப்பர்; நேர்மையானவர்; பிறருக்கு உதவக் கூடியவர்; பிறர் துன்புறும்போது தன்னால் இயன்ற உதவியை உடனுக்குடன் செய்வர்; எதிரியின் கோபத்தைக் கூடத் தணியச் செய்து, அவரை மதிப்பாக நடத்தி மன்னிக்கவும் செய்வர்; இவர்களுடைய தாராள மனப்பான்மையும், அளவுக்கதிகமான இளகிய மனமும் இவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும்; அகிம்சைவாதி; யாருக்கும் தீங்கு

செய்யமாட்டார்; மற்றவர் இவரைச் சுலபமாய்ப் புரிந்துகொள்ள முடியாது; இனிமையான மனோபாவம் உடையவர்; புதிய எண்ணங்களாலும், கருத்துகளாலும் பிறரை நடத்த வல்லவர்; நாகரிகம் உடையவர்; மனிதருடைய வேதனைகள் நீங்க வழிகாட்டுவர்; சிலநேரங்களில் முழுக்கமுழுக்க மாறுபட்ட எண்ணங்களை உடையவராய் இருப்பர்; ஆன்மிக வாழ்வில் நாட்டமுடையவர்; வெளிநாடு செல்ல விரும்புவர்; போகவும் செய்வர்; கள்ளம் கபடமற்றவர்; யதார்த்த மானவர்; பயமில்லாதவர்; அடிக்கடி வீடு மாறுபவர். நோய்வாய்ப்படும் போது எளிதில் கலவரமடைகிற மனநிலையை யுடையவர்; நண்பர் அனைவரையும் நேர்மையானவராகக் கருதி ஏமாறுவர்; நல்ல உடல்நலம் வேண்டும் என விரும்புவோர்க்குத் தேவையான உதவியும், அறிவுரையும் வழங்குவர்; அதேபோல் செல்வம் ஈட்ட விரும்புபவர்க்குத் தக்க அறிவுரைகளை, எண்ணங்களைக் கூறுவர்; இவ்விரண்டும் இவரது வாழ்க்கைக் குறிக்கோள்களாக இருக்கும்.

<u>உடல்நலம்</u>

வாய்வுக்கோளாறு, கால், முட்டி, குடல் உபாதை, விசக் காய்ச்சல், மூலநோய், வீக்கம், கல்லீரல், பலவீனமான குடல், நரம்புக்கோளாறு போன்ற நோய்கள் இவர்களைப் பாதிக்கும்.

<u>பொருளாதாரம்</u>

சம்பாதனையைக் காட்டிலும் செலவு செய்யக் கூடியவர்; ஊதாரியாகவும் இருப்பார்.

<u>காதல்/ திருமணம்</u>

காதல்/ திருமணம், வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்க எப்போதுமே தயக்கம் காட்டமாட்டார்; அறிவுடன் கூடிய அழகிய மனைவியை விரும்புவார்; இழிவான எண்ணங்களைக் கொண்டவர்க்குத் துணைபோக மாட்டார்; தனித் தன்மையுடைவர்; கற்பனை வாழ்க்கையுடையவர்; வாழ்நாள் முழுவதிலும் காதல், திருமண வாழ்வில் நாட்டமுடையவர்.

மீனப் பெண்கள் இரட்டை எண்ணம் உடையவர். அன்பும் பாசமும் காட்டுவதுடன் கணவனை மதிக்கவும் செய்வர்; சில நேரங்களில் இதற்கு முரணாகவும் செயல்படுவர்.

தொழில்

எதையும் முறையாக, நேர்மையாக உண்மையுடன் செய்யக் கூடியவர்; அமைச்சர், வைத்தியர், முகவர், வேதியியலாளர், கோயிலில் சேவை புரிவோர், மருத்துவமனையில் பணிபுரிவோர், வங்கி போன்ற பொருளாதார நிறுவனங்களில் பணிபுரிவோர், வியாபாரி என இவர்கள் பல தொழில்களில் ஈடுபடுவர்.

நட்சத்திரங்கள்

இராசி மண்டலம் மேஷம் முதல் மீனம்வரை 12 சரிசமமான பாகங்களைக் கொண்டு பிரிக்கப்பட்டிருப்பது போலவே 27 சரிசமமான பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சரிசமமான ஒவ்வொரு பகுதியும் 13° 20' பாகைகளையுடையது. இவை ஒவ்வொன்றும் மேஷத்தில் தொடங்கி மீனத்தில் முடியும். இந்த 27 பிரிவுகளைச் சந்திர மண்டலம் அல்லது நட்சத்திரம் என அழைப்பர்.

இந்த 27 நட்சத்திரங்களும் இராசி மண்டலத்தில் மூன்று பெரும் பிரிவுகளாக அடக்கப்படுகின்றன. அதாவது மேஷம்முதல் கடகம்வரை ஒன்பது நட்சத்திரங்களைக்கொண்ட ஒரு பிரிவும், சிம்மம்முதல் விருச்சிகம் வரை ஒன்பது நட்சத்திரங்களைக்கொண்ட இன்னொரு பிரிவும், தனுசிலிருந்து மீனம்வரை ஒன்பது நட்சத்திரங்களைக் கொண்ட மற்றொரு பிரிவும் என 27 நட்சத்திரங்களும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஒவ்வொரு பிரிவிற்கும் முறையே கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, வியாழன், சனி, புதன் ஆகிய 9 கோள்கள்

அதிபதிகளாக உள்ளன. இவ்வாறு அமைந்த இராசி மண்டலம் ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட கற்பனைப் பாதைக்குள் அடங்கும். இவ்வாறு நம் முதாதையரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நட்சத்திரங்கள் ஆகாயத்தில் ஒரு தனிப்பட்ட பளிச்சிடும் நட்சத்திரமாகவோ ஒரு கூட்டமான நட்சத்திரங்களாகவோ உள்ளன. அவற்றை மிகவும் எளிதாகக் கண்டுணரலாம். அவற்றின் எண்ணிக்கைகீழ் வருமாறு அமைகின்றன.

அசுவினி -3,	பரணி - 3,	கிருத்திகை - 6,
உரோகிணி - 5,	மிருகசீரிடம் - 3,	திருவாதிரை - 1,
புனர்பூசம் - 5,	பூசம் - 3,	ஆயில்யம் - 6,
மகம் - 5,	பூரம் - 4,	உத்திரம் - 4,
அத்தம் - 5,	சித்திரை - 1,	சுவாதி - 1,
விசாகம் - 3,	அனுடம் - 3,	கேட்டை - 3,
மூலம் - 6,	பூராடம் - 4,	உத்திராடம் - 4,
திருவோணம் - 3,	அவிட்டம் - 4,	சதயம் - 100,
பூரட்டாதி - 4,	உத்திரட்டாதி - 4,	ரேவதி - 3.

ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதற்குப் 'பாதம்' என்று பெயர். ஒவ்வொரு பாதமும் 3° 20' பாகைகளையுடையது. மொத்தம் 108 பாதங்கள். ஒவ்வொரு இராசியும் 2¼ நட்சத்திரம் அல்லது 9 பாதங்களையுடையது. ஒரு பாதம் என்றால் 'கால் நட்சத்திரம்' என்று பொருள்.

இராசிகளைப் பற்றிய விவரங்கள் பொதுநிலையில் முற்பகுதியில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், நட்சத்திரங்களைப் பற்றிய சில விவரங்கள் இங்குக் கூறப்படுகின்றன. சந்திரன் 27 நாட்களுக்கொருமுறை ஒவ்வொரு நட்சத்திரத்திலும் சஞ்சரிக்கும்.

1. அசுவினி

அசுவினி, மேஷத்தில் 0-13°20' பாகைகளைக் கொண்டது; இதுதான் முதல் நட்சத்திரம். இதன் அதிபதி கேது; இது செவ்வாயாலும் கேதுவாலும் ஆளப்படுகிறது. அசுவினியானது தலை, மூளைப் பகுதிகளைக் குறிக்கிறது. இந் நட்சத்திரத்திற்குரியவர் ஊதாரியாக, பேராசையுடையவராக இருப்பர்; அறிவாளி; திறமைசாலி; நல்லதோற்றமுடையவர்.

2. பரணி

பரணி, மேஷத்தில் 13°20'-26°40' பாகைகளையுடைய இரண்டாவது நட்சத்திரம்; இதன் அதிபதி சுக்கிரன். இது செவ்வாயாலும், சுக்கிரனாலும் ஆளப்படுகிறது; இது தலை, மூளை, கண் பகுதிகளைக் குறிக்கிறது. பரணியில் பிறந்தவரின் மனம் எப்பொழுதும் இன்பத்தை நாடும்; பேராசை யுடையவர்; புத்திசாலி; பெற்றோருக்கு நல்ல பிள்ளையாக இருப்பார்; புகை பிடிப்பவராக இருப்பார்; நல்ல நோக்கத்துடன் செயல்படுவார்.

3அ. கார்த்திகை முதல் பாதம்

கார்த்திகை, மேஷத்தில் 26°40' - 30° பாகைகளையுடையது; இதன் அதிபதி சூரியன். இது செவ்வாயாலும் சூரியனாலும் ஆளப்படுகிறது. இந்நட்சத்திரமானது தலை, கண்கள், பார்வை, மூளை போன்ற பகுதிகளைக் குறிக்கிறது. இந்நட்சத்திரத்திற்குரியோர் ஆரோக்கியமுடையவர்; வலிமை பொருந்தியவர்; ஆர்வமிக்கவர்; பிறரை ஆளும் தோற்றமுடையவர்; மிகுதியாக உண்பர்; புகழ் பெறுவர்.

3ஆ. கார்த்திகை 2, 3, 4 ஆவது பாதங்கள்

கார்த்திகை, ரிஷபத்தில் 0°-10° பாகைகளைக் கொண்டது. இதன் அதிபதி சூரியன்; சுக்கிரனாலும் சூரியனாலும் இந்நட்சத்திரம் ஆளப்படுகிறது. இது முகம், கழுத்து, தாடை ஆகிய பகுதிகளைக் குறிக்கும். இந்நட்சத்திரத்தினர்

எப்பொழுதும் பிறருடன் இருப்பதை விரும்புவர்; வசதியான, பகட்டான வாழ்க்கையை விரும்புவர்; பயனுள்ள செயல்களை மேற்கொள்ளுவர்; சிரமமற்ற தொழிலை மேற்கொள்ளுவர்; நிச்சயமில்லாத முதலீடு, துணிகரமான வியாபாரம் போன்ற துறைகளில் நாட்டமுடையவர்.

4. உரோகிணி

உரோகிணி, ரிஷபத்தில் 10°- 23° 20' பாகைகளை உடையது; இதன் அதிபதி சந்திரன்; இப்பகுதி சுக்கிரனாலும் சந்திரனாலும் ஆளப்படுகிறது. இந் நட்சத்திரம் முகம், வாய், நாக்கு, கழுத்து ஆகிய பகுதிகளைக் குறிக்கும். உரோகிணியில் பிறந்தவர் இரம்மியமான முறையில் பழகுவர்; இனிமையாகப் பேசக் கூடியவர்; கவர்ச்சியான தோற்றத்தையுடையவர்; கருணையுள்ளம் படைத்தவர்; எதிர்பாலினரை மிகவும் நேசிப்பர்.

5அ. மிருகசீரிடம் 1, 2 பாதங்கள்

மிருகசீரிடம், ரிஷபத்தில் 23° 20' - 30° பாகைகளைக் கொண்டது; இதன் அதிபதி செவ்வாய். இப்பகுதி சுக்கிரனாலும் செவ்வாயாலும் ஆளப்படுகிறது. மிருகசீரிடமானது முகம், கன்னம், தொண்டை, நாக்கு ஆகிய பகுதிகளைக் குறிக்கிறது; இதில் பிறந்தவர் கடுமையாக உழைப்பர்; செல்வந்தராக முயற்சிப்பர்; தோட்டம், நிலம் முதலியவற்றைப் பெற முயல்வர்.

5ஆ. மிருகசீரிடம் 3, 4 பாதங்கள்

மிருகசீரிடம், மிதுனத்தில் 0° - 6° 40' பாகைகளையுடையது. இதன் அதிபதி செவ்வாய். இது புதனாலும் செவ்வாயாலும் ஆளப்படுகிறது. இது தொண்டை, தோள்கள், காது, நெஞ்செலும்பு ஆகியவற்றைக் குறிக்கும். இந்நட்சத்திரத்திற்குரியவர் மனபலமுடையவர்; ஆர்வமுடையவர்; சுறுசுறுப்புடையவர்; முன்னெச்சரிக்கையுடையவர்; உழைப்புக்கு அஞ்சமாட்டார்; செல்வந்தராகும் நோக்கமுடையவர்.

6. திருவாதிரை

திருவாதிரை, மிதுனத்தில் 6° 40' - 20° பாகைகளை யுடையது; இதற்கு அதிபதி இராகு. இப்பகுதி புதனாலும் இராகுவாலும் ஆளப்படுகிறது. தொண்டை, தோள், கைகள் ஆகிய பகுதிகளை இந்நட்சத்திரம் குறிக்கிறது. இதில் பிறந்தவர் மனத்தளவில் சுறுசுறுப்பாக இயங்குவர்; நல்ல குணமுடையவர்; விற்பனை செய்வதில் நாட்டமுடையவர்; பிற கோள்கள் சரியில்லாமல் இருக்கும் போது திருடராகவும், நடத்தைக் கெட்டவராகவும், பொய் கூறுபவராயும் மாறிவிடுவர்.

7அ. புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்

புனர்பூசம், மிதுனத்தில் 20° - 30° பாகைகளைக் கொண்டது; இதன் அதிபதி வியாழன். இது புதனாலும் வியாழனாலும் ஆளப்படுகிறது. புனர்பூசமானது காது, தொண்டை, தோள், பகுதி, நெஞ்சுப் பகுதி இவற்றைக் குறிக்கும். இந்நட்சத்திரத்திற்குரியவர் பரந்த மனப்பான்மையுடையவர்; புத்திசாலி; நினைவாற்றல் மிக்கவர்; உள்ளுணர்வு பெற்றவர்; மேல்மேலும் படிக்க ஆர்வமுடையவர்; செல்வமும் புகழும் உடையவர்; சுயக் கட்டுப்பாடு உடையவர்.

7ஆ. புனர்பூசம் 4 ஆம் பாதம்

புனர்பூசம், கடகத்தில் 0° - 3° 20' பாகைகளை உடையது; இதன் அதிபதி வியாழன்; இது சந்திரனாலும் வியாழனாலும் ஆளப்படுகிறது; நுரையீரல், நெஞ்சு, வயிறு, கல்லீரல் ஆகிய பகுதிகளை இந்நட்சத்திரம் குறிக்கும். இதில் பிறந்தவர் நம்பிக்கைக்குரியவர்; மன்னிக்கும் மனப்பாங்குடையவர்; அழகை நேசிக்கக் கூடியவர்; கருணையுள்ளம் படைத்தவர்; செல்வமுடையவர்.

8. பூசம்

பூசம், கடகத்தில் 3° 20' - 16° 40' பாகைகளைக் கொண்டது;

இதன் அதிபதி சனி. இப்பகுதி சந்திரனாலும் சனியினாலும் ஆளப்படுகிறது. இது நுரையீரல், வயிற்றுப்பகுதி, நெஞ்செலும்பு ஆகியவற்றைக் குறிக்கும். பூசத்தார் கவனமுடன் செயல்படுவர்; கவலைப்படும் மனமுடையவர்; எந்தக் காரியத்தையும் முறையுடன் செய்து முடிப்பர்; பொறுமையாக உழைக்க வல்லவர்; வசதியுடையவர்; ஒழுக்க முடையவர்.

9. ஆயில்யம்

ஆயில்யம், 16° - 40' - 30" பாகைகளைக் கொண்டது; இதற்கு அதிபதி புதன்; இது சந்திரனாலும் புதனாலும் ஆளப்படுகிறது. இந்நட்சத்திரம் நுரையீரல், வயிறு, கல்லீரல் ஆகிய பகுதிகளைக் குறிக்கும்; இதற்குரியோர் கல்வியில் நாட்டமுடையவர்; பயணங்களை விரும்புவர்; சரளமாகப் பேசக் கூடியவர்; மொழி, கலை, இசை, இலக்கியம் போன்றவற்றில் நாட்டமுடையவர்.

10. மகம்

மகம், சிம்மத்தில் 0° - 13° 20' பாகைகளைக் கொண்டது; இதன் அதிபதி கேது; இப்பகுதி சூரியனாலும் கேதுவாலும் ஆளப்படுகிறது. இது இதயம், முதுகுப்பகுதி, இடுப்புக்கு மேற்பகுதி ஆகியவற்றைக் குறிக்கும். மகத்தார் அனுசரிக்கக் கூடியவர்; தற்காப்பில் கவனமுடையவர்; வேகம், ஆர்வம் உடையவர், எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல் உடையவர்; பிடிப்பிடியான கொள்கை யுடையவர்; எதிலும் உரிமையை நிலைநாட்டக் கூடியவர்; நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்; செல்வந்தர்; வாழ்க்கையை நல்லமுறையில் அனுபவிப்பர்.

11. பூரம்

பூரம், சிம்மத்தில் 13° 20' - 26° 40' பாகைகளை உடையது. இதற்கு அதிபதி சுக்கிரன். இந்தப் பகுதி சூரியனாலும் சுக்கிரனாலும் ஆளப் படுகிறது. இது முதுகெலும்புப் பகுதி, இதயம் ஆகியவைகளைக் குறிக்கும். இதில் பிறந்தவர் இனிய மனமுடையவர்; பகட்டான, வசதியான வாழ்வை

விரும்புவர்; உண்மையானவர்; நேர்மையானவர்; முன்யெச்சரிக்கையாக இருப்பார்; பண்பாளர்.

12அ. உத்திரம் 1 பாதம்

உத்திரம், சிம்மத்தில் 26° 40' - 30° பாகைகளை உடையது. இதன் அதிபதி சூரியன். இது முழுக்க முழுக்க சூரியனால் ஆளப்படுகிறது. இது முதுகெலும்புப் பகுதியைக் குறிக்கிறது. இதற்குரியோர் உயர்ந்த குறிக்கோளையுடையவர்; அதிகார மனப்பான்மையுடையவர்; பெருமை அடைய விரும்புவர்; நம்பிக்கைக் குரியவர்; செல்வ வாழ்க்கையை யுடையவர்; பிறரால் விரும்பத்தக்கவர்; உயர் கல்வியினால் செல்வம் ஈட்டுவர்.

12ஆ. உத்திரம் 2, 3, 4 பாதங்கள்

உத்திரம், கன்னியில் 0° - 10° பாகைகளை உடையது; இதன் அதிபதி சூரியன். இப்பகுதி புதனாலும் சூரியனாலும் ஆளப்படுகிறது. இது குடல், சிறுநீர்ப்பை, கல்லீரல் ஆகிய பகுதிகளைக் குறிக்கும். இதற்குரியோர் திறமையான உழைப்பாளி; சோதிடம், கணக்கு போன்றவற்றில் நாட்டமுடையவர்; ஆழ்ந்த அறிவுடையவர்; கல்விமான்.

13. அஸ்தம்

அஸ்தம், கன்னியில் 10° - 23° 20 பாகைகளைக் கொண்டது; இதன் அதிபதி சந்திரன். இப்பகுதி புதனாலும் சந்திரனாலும் ஆளப்படுகின்றது. இது சிறுநீர்ப்பை, குடல், சுரப்பிகள் ஆகியவற்றைக் குறிக்கும். இவர்கள் வேதங்களைக் கற்க வல்லவர்; கடின உழைப்பாளி; வியாபாரி; வலிமையானவர்; குடிப்பதை விரும்புவர்.

14அ. சித்திரை 1, 2 பாதங்கள்

சித்திரை, கன்னியில் 23° 20' - 30° பாகைகளைக் கொண்டது. இதன்

அதிபதி செவ்வாய். இது புதனாலும் செவ்வாயாலும் ஆளப்படுகிறது; இது தொந்தி, அடிவயிற்றுப் பகுதி ஆகியவற்றைக் குறிக்கும். சித்திரைக்குரியவர் தைரியசாலி; முன்கோபி; பொறுமையற்றவர்; எதிலும் வெறுப்படைவர்; அழகை விரும்புவர்; அழகிய கண்களையுடையவர்; நகைச்சுவையில் நாட்டமுடையவர்.

14அ. சித்திரை 3, 4 பாதங்கள்

சித்திரை, துலாத்தில் 0° - 6° 40' பாகைகளையுடையது. இதன் அதிபதி செவ்வாய். இப்பகுதி சுக்கிரனாலும் செவ்வாயாலும் ஆளப்படுகிறது. சிறுநீரகம், பிறப்பு உறுப்புகள், அடிவயிற்றுப் பகுதி போன்றவற்றை இது குறிக்கும். இவர்கள் நல்ல குறிக்கோளினர்; தெளிவான பார்வையும், உள்ளுணர்வும் கொண்டவர்; கோபமற்ற மனநிலைக்குரியவர்; நல்ல தொழில்களைச் செய்ய விரும்புவர்.

15. சுவாதி

சுவாதி, துலாத்தில் 6° 40' - 20° பாகைகளைக் கொண்டது. இதன் அதிபதி இராகு. இப்பகுதி சுக்கிரனாலும் இராகுவாலும் ஆளப்படுகிறது. இது தோள், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, சிறுநீர்க்குழாய் ஆகியவற்றைக் குறிக்கும். சுவாதியினர் திறமைசாலி; உள்ளுணர்வும் நினைவாற்றலும் உடையவர்; நேர்மையும் நியாயமும் உடையவர்; புத்திமான்; எதையும் நிதானமாகப் புரிந்துகொள்வர்.

16அ. விசாகம் 1, 2, 3 பாதங்கள்

விசாகம், துலாத்தில் 20° - 30° பாகைகளையுடையது. இதற்கு அதிபதி வியாழன். சுக்கிரனும் வியாழனும் இப்பகுதியை ஆள்கின்றனர். இது வயிற்றின்கீழ்ப் பகுதிகள், சிறுநீர்ப்பை, சிறுநீரகங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். விசாகத்தார் இரம்மியமான முறையில் பழகுவர்; நல்ல தோற்றமுடையவர்; அனைவரையும் நேசிப்பர்; கருணையுள்ளம் படைத்தவர்; புத்திசாலித்தனமான பேச்சும் வாய்ச்சவடாலும் உடையவர்.

16a. விசாகம் 4 ஆம் பாதம்

விசாகம், விருச்சிகத்தில் 0° - 3° 20' பாகைகளையுடையது. இதன் அதிபதி வியாழன். செவ்வாயும் வியாழனும் இதனை ஆள்கின்றனர். இது சிறுநீர்ப்பை, பிறப்பு உறுப்புகள், குதம், சிறுகுடல் போன்றவற்றைக் குறிக்கும். விசாகத்தில் பிறந்தவர் கௌரவமானவர்; பெரிய மனிதரின் ஆதரவைப் பெற்றவர்; உயர்ந்த எண்ணமுடையவர்; நேர்மையானவர்; உதாரி; வேகம் மிகுதியுடையவர்; இனிய மனமுடையவர்.

17. அனுசம்

அனுசம், விருச்சிகத்தில் 3° 20' - 16° 40' பாகைகளையுடையது. இதற்கு அதிபதி சனி; செவ்வாயும் சனியும் இப்பகுதியை ஆள்கின்றவர்; இது சிறுநீர்ப்பை, பிறப்பு உறுப்புகள், குதம், இடுப்புப் பகுதியைச் சுற்றியுள்ள எலும்புகள் ஆகியவற்றைச் சுட்டும். அனுசத்தார் தீர்க்க மனநலம் பொருந்தியவர்; சுயநலக்காரர்; வேகத்தோடு செயல்படுவர்; கொடுமையாகவும் நடக்கவல்லவர்; நேர்மையற்றவர்; நடைமுறை வாழ்க்கை வாழ்பவர்; கர்வமிக்கவர்.

18. கேட்டை

கேட்டை, விருச்சிகத்தில் 16° 40' - 30° பாகைகளையுடையது. இதன் அதிபதியாகிய புதனாலும், செவ்வாயாலும் இது ஆளப்படுகிறது. சிறுகுடல், குதம், பிறப்பு உறுப்புகள், கருப்பை ஆகியவை இதற்குரியது. கேட்டையினர் தைரியமிக்கவர்; சண்டையிடுபவர்; கோபக்காரர்; செயல்களில் வேகம் மிகுதி; வெறுப்புக்கொள்ளும் மனத்தர்; நண்பர் குறைவு.

19. மூலம்

மூலம், தனுசில் 0° - 13° 20' பாகைகளையுடையது. இதன் அதிபதி கேது. இதைக் கேதுவும் வியாழனும் ஆள்கின்றனர். இது இடுப்பு, தொடை, நரம்புகள் ஆகியவற்றைக் குறிக்கும். மூலத்தார் இனிய மனத்தர்; நேர்மையானவர்,

மதிக்கத்தக்கவர்; நகைச்சுவையை விரும்புவர்; பயபக்தியுடையவர்; நம்பிக்கை யுடையவர்; கருணையுள்ளத்தினர்; செல்வமுடையவர்.

20. பூராடம்

பூராடம், தனுசில் 13° 20' - 26° 40' பாகைகளையுடையது. இதற்கு அதிபதி சுக்கிரன்; இதனை வியாழனும் சுக்கிரனும் ஆள்கின்றனர். இது தொடை, இடுப்பு, நரம்பு ஆகியவற்றைக் குறிக்கும். பூராடத்தார் நாகரிக மானவர்; நேர்மையானவர்; செலவாளி; கல்வியில் ஆர்வமுடையவர்; எல்லாம் நன்மைக்கே என்ற கொள்கையுடையவர்; பெருமையடித்துக்கொள்வதில் விருப்ப முடையவர்.

21அ. உத்திராடம் 1 ஆம் பாதம்

உத்திராடம், தனுசு இராசியில் 26° 40' - 30° பாகைகளையுடையது; இதன் அதிபதி சூரியன்; இதனை வியாழனும் சூரியனும் ஆள்கின்றனர். இது தொடை, தொடை எலும்பு ஆகியவற்றைச் சுட்டும். இந்நட்சத்திரத்தினர் உயர்ந்த நோக்கமுடையவர்; மதம் தொடர்பான முயற்சியில் வெற்றிகாணக் கூடியவர்; நம்பிக்கைக்குரியவர்; உயர்கல்வியில் நாட்டமுடையவர்; நல்ல சமுதாயத்திற்குத் தூண் போன்ற அமைவர்; நன்றியுடையவர்; நண்பர் மிகுதி.

21ஆ. உத்திராடம், 2, 3, 4 பாதங்கள்

உத்திராடம், மகரத்தில் 0° - 10° பாகைகளைக் குறிக்கும். இதன் அதிபதி சூரியன். இதனைச் சூரியனும் சனியும் ஆள்கின்றனர். இது தோளையும் மூட்டுப் பகுதியையும் குறிக்கும். இதில் பிறந்தோர் சரியானமுறையில் செயல்பட வல்லவர்; உண்மையான உழைப்பாளி; நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்; எதிலும் கணக்குப் பார்ப்பவர்; செலவுகளைக் குறைத்துச் செயல்பட வல்லவர்; பொருளாதாரக் கொள்கையுடையவர்.

22. திருவோணம்

திருவோணம், மகரத்தில் 10° - 23° 20' பாகைகளை உடையது. இதற்கு அதிபதி சந்திரன். சனியும் சந்திரனும் இப்பகுதியை ஆள்வர்; இது சுரப்பி, முட்டிகளைக் குறிக்கும். திருவோணத்தார் கவலையுடன் தென்படக் கூடியவர்; வாழ்க்கையில் நம்பிக்கை குறைந்தவர்; துணிவற்றவர்; முன்னெச்சரிக்கை யுடனும், கவனமுடனும் செயல்படுவர்; நேர்மையானவர்; பொறுமையுடன் கடமை செய்வர்.

23அ. அவிட்டம் 1, 2 பாதங்கள்

அவிட்டம், மகரத்தில் 23° 20' - 30° பாகைகளை உடையது; இதற்கு அதிபதி செவ்வாய். இதனைச் சனியும் செவ்வாயும் ஆள்வர். முட்டி, முட்டி எலும்புகளை இது குறிக்கும். அவிட்டத்தார் துரிதமாகவும், கவனமுடனும் முன்னெச்சரிக்கையுடனும் தைரியத்துடனும் செயல்படுவர்; குறிக்கோள் உடையவர்; தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வர்.

23ஆ. அவிட்டம் 3, 4 பாதங்கள்

அவிட்டம், கும்பத்தில் 0° - 6° 40' பாகைகளை உடையது. இதன் அதிபதி செவ்வாய். இதனைச் சனியும் செவ்வாயும் ஆள்வர். இது கணுக்கால், முட்டிக்குக் கீழுள்ளக் கால் பகுதிகளைக் குறிக்கும். அவிட்டத்தார் முன்கோபி, சண்டைக்காரர், எதையும் முறையுடன் செய்வர்; ஆராய்ச்சியாளர்; மதப்பற்றுடையவர்; சமூகப்பற்றுடையவர்.

24. சதயம்

சதயம், கும்பத்தில் 6° 40' - 20° பாகைகளையுடையது; இதன் அதிபதி இராகு. இதனைச் சனியும் இராகுவும் ஆள்கின்றனர். இது முழங்காலையும் கணுக்காலையும் குறிக்கும். சதயத்தார் நேர்மையானவர்; சுயசிந்தனையுடையவர்; சோம்பேறி; ஒப்பனை விரும்புவர்; பொறுமைசாலி; தனித்துச் செயல்படவல்லவர்.

25அ. பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்

பூரட்டாதி, கும்பத்தில் 20° - 30° பாகைகளையுடையது. இதன் அதிபதி வியாழன். இதனைச் சனியும் வியாழனும் ஆள்வர். இது கணுக்காலைக் குறிக்கும். இதற்குரியோர் எல்லாம் நன்மைக்கே என்று செயல்புரிவர்; நண்பரை விரும்புவர்; உத்தமர்; சோதிடத்தில் ஆர்வமுடையவர்; முறையாகச் செயலில் ஈடுபடுவர்; சுயநலமின்றியும் செயல்படுவர்.

25ஆ. பூரட்டாதி 4 ஆம் பாதம்

பூரட்டாதி, மீனத்தில் 0° - 3° 20' பாகைகளையுடையது. இதன் அதிபதி வியாழன். இது முழுக்கமுழுக்க வியாழனால் ஆளப்படுகிறது. இது காலையும் முன்னங்கால்களையும் குறிக்கும்; இதற்குரியவர் தாரமைப்பான்மை யுடையவர்; கருணை தேவதைகளின் ஆசியைப் பெற்றவர்; தத்துவத்தில் நாட்டம் உடையவர்; நாகரிக நடத்தையுடையவர்.

26. உத்திரட்டாதி

உத்திரட்டாதி, மீனத்தில் 3° 20' - 16° 40' பாகைகளையுடையது. இதற்கு அதிபதி சனி. இதனை வியாழனும் சனியும் ஆள்கின்றனர். இந் நட்சத்திரம் கால்களைக் குறிக்கும். உத்திரட்டாதியினர் பண்பாளர்; தத்துவவாதி; தொந்தரவுகளை வெறுக்கக் கூடியவர்; ஏழைகளுக்கு உதவுவார்.

27. இரேவதி

இரேவதி, மீனத்தில் 16° 40' - 30° பாகைகளையுடையது. இதன் அதிபதி புதன். இதனை வியாழனும் புதனும் ஆள்கின்றனர். இந்நட்சத்திரம் கால், முன்னங்கால்களைக் குறிக்கும். இரேவதியில் பிறந்தவர் இரட்டை எண்ணம் உடையவர். இடத்திற்குத் தகுந்தாற்போல் தம்மை மாற்றிக்கொள்வர்; உள்ளுணர்வும், கருணையும், திறமையும் அறிவும் உடையவர்; தத்துவவாதி; மதப்பற்றுடையவர்; சரியான நியாயம் வழங்குவர்; சரிசமமான மனத்தை உடையவர்.

திசை - புத்தி

மேற்கூறிய 27 நட்சத்திரங்களும் 9 கோள்களால் ஆளப்படுகின்றன. இந்த ஒவ்வொரு கோளுக்கும் சூரிய ஆண்டுகள் இவ்வளவு என்று முன்னோர் கூறியுள்ளனர். இந்தக் கோள்களுக்குரிய சூரிய ஆண்டுகள் 'தசை' அல்லது 'தசா' அல்லது 'திசை' என்றழைக்கப்படுகிறது. சோதிடத்தில் 'விம்சோத்தரி திசை', 'அட்டோத்தரி திசை', 'காலச் சக்கர திசை' என்ற பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றில் விம்சோத்தரி திசை என்பது சுலபமானதும் மிகவும் சரியானதும் ஆகக் கருதப்படுகிறது. எனவே, சோதிடத்தில் இதுவே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

இராகுவும் கேதுவும் உட்பட 9 கோள்களுக்கும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் சூரிய ஆண்டுகள் பரிந்துரைக்கப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. ஒவ்வொரு கோளுக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய சூரிய ஆண்டுகள் கீழ் வருமாறு ஒதுக்கப்பட்டுள்ளன. அனைத்துக் கோள்களுக்குமாக மொத்தம் 120 சூரிய ஆண்டுகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. அவை:

கேது - 7,	சுக்கிரன் - 20,	சூரியன் - 6,
சந்திரன்-10,	செவ்வாய் - 7,	இராகு - 18,
வியாழன் -16,	சனி - 19,	புதன் - 17

என்றவாறு ஆண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திசையை அறிவதற்குச் சந்திரன் என்ற சரியான நட்சத்திரத்தை அறிந்து கொண்டு, அந்த நட்சத்திரத்தின் அதிபதி, பிறப்பதற்குப் பிறகு எத்தனை சூரிய ஆண்டு இருப்பில் பெற்றுள்ளது என்று கணக்கிட்டு அறியப்படல் வேண்டும். இந்தத் திசைக்குப் பிறகு மேற்கூறிய முறையில் அடுத்தடுத்துத் திசைகள் வரும்.

மேலும், இந்தத் திசை ஒவ்வொன்றும் மேற்குறிப்பிட்ட அதே முறையில் 9 உட்பிரிவுகளாகப் பரிக்கப்படுகின்றன. இந்த உட்பிரிவுகள் 'புத்தி' என்றழைக்கப்படுகின்றன. இந்த ஒவ்வொரு புத்தியும் மேற்கூறிய அதே விதத்தில் மேலும் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இதற்கு 'அந்தரம்' என்று பெயர். இது மேலும் 9 உட்பிரிவுகளாகப் பிரிக்கப்படும்போது அது 'சூட்சமம்' என்றழைக்கப்படுகிறது. இதுவும் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 'பிராணம்' என்றழைக்கப்படுகிறது.

ஜாதகம்

ஒருவர் பிறந்த போது இராசிகளில் கோள்கள் நின்ற நிலையை ஒரு குறிப்பிட்ட இராசி சக்கரத்தில் (வரைபடமாக) குறித்துக் காட்டி, அப்போது நடப்பிலுள்ள விம்சோத்தரி திசையிலுள்ள இருப்பு (ஆண்டு, மாதம், நாள்) விவரத்தைத் தரும் 'குறிப்பு' ஜாதகம் அல்லது பிறந்த கால ஜாதகம் எனப் படுகிறது. பொதுவாகத் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்திலும் கேரளாவிலும் பயன்படுத்தப் படும் இராசிச் சக்கரமானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இராசிச் சக்கரம்

மீனம்	மேஷம்	ரிஷபம்	மிதுனம்
கும்பம்			கடகம்
மகரம்			சிம்மம்
தனுசு	விருச்சிகம்	துலாம்	கன்னி

இலக்கினமும் பாவங்களும்

ஒருவர் பிறந்தபோது உதயமாகும் இராசி வரைபடத்தில் 'இலக்கினம்' என்று குறிக்கப்படுகிறது. இது 'இலக்கின பாவம்' அல்லது 'முதல் வீடு' அல்லது 'முதல் பாவம்' என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது ஒருவர் ஓரிடத்தில் பிறக்கும்போது கிழக்கில் அப்பொழுது உதயமாகும் இராசியே இதுவாகும். இந்த இலக்கினத்திலிருந்து அடுத்தடுத்து வரும் இராசிகள் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள வரிசையில் 12 இராசிகளும் 12 வீடுகளாக அல்லது பாவங்களாகக் கணக்கிடப் படுகின்றன. இந்த இலக்கினத்திலிருந்து 12 வீடுகள் ஒவ்வொன்றுக்கும் சோதிடத்தில் தனிப்பண்புகள் இருக்கின்றன. ஜாதகத்தில் சந்திரன் நின்ற இடம் 'சந்திர இலக்கினம்' என்றும் 'இராசி' என்றும் சொல்லப்படுகிறது.

நவாம்சம்

ஒவ்வொரு இராசியும் 3° 20' பாகைகளையுடைய சரிசமமான 9 பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. இவ்வாறு 12 இராசிகளும் 108 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பிரிவிற்கும் தனி அதிபதி உண்டு. மேடத்திலிருந்து மீனம் வரையிலான இந்த ஒவ்வொரு 12 பகுதிகளுக்கும் முறையே செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, சனி, வியாழன் ஆகியன அதிபதிகளாகின்றன.

கேந்திரம் - திரிகோணம்

இலக்கினம் முதல் கேந்திரமாகக் கொள்ளப்படுகிறது. இலக்கினத்திலிருந்து எண்ணும்போது 4,7,10 ஆவது வீடுகள் 'கேந்திரம்' என்றழைக்கப்படுகிறது.

இலக்கினத்திலிருந்து எண்ணும்போது முதலாவது, ஐந்தாவது, ஒன்பதாவது வீடுகள் திரிகோணம் எனப்படுகிறது.

கோச்சாரம்

பிறந்த காலத்தில் நின்ற கோள்களின் நிலைக்குத் தகுந்தவாறு திசை - புத்திப் பலன்கள் நடப்பதைப் போன்று தற்போது காணப்படும் கோள்களின்

நிலைகளுக்கேற்பச் சோதிடப் பலன்கள் ஏற்படும். தற்போதைய நிலையில் கோள்கள் சஞ்சரிக்கும் நிலையினால் ஏற்படும் விளைவுகளை அறிவது 'கோட்சாரம்' எனப்படுகிறது.

<u>உச்சம் -- நீச்சம்</u>

ஒவ்வொரு கோளும் ஒரு குறிப்பிட்ட இராசியில் வலிமையுடன் சஞ்சரிப்பதாகக் கருதப்படுவது 'உச்சம்' எனப்படுகிறது. இவ்வாறு ஒரு கோள் உச்சம் பெறும் இராசியிலிருந்து 7 ஆவது இராசியில் வலிமையிழந்து 'நீச்சம்' அடைகிறது. உச்சம் பெற்ற கோள் ஜாதகருக்குச் சிறப்புப் பலன்களைக் கொடுப்பதாகவும், நீச்சம் அடைந்தகோள் மோசமான பலன்களைக் கொடுப்பதாகவும் கருதப் படுகிறது.

<u>யோகம் -- தோசம்</u>

ஜாதகத்தில் கோள்கள் சிறப்பாக அமைந்தால் 'யோகம்' எனப் படுகிறது. ஒவ்வொரு கோளும் ஒவ்வொரு சிறப்பான அமைப்பில் இடம்பெறும் போது, பல்வகையான யோகங்கள் ஏற்படுகின்றன.

ஜாதகத்தில் கோள்கள் ஒரு குறிப்பிட்ட வகையில் நிற்கும்போது, அவை கெடுதல் விளைவிக்கும் எனக் கருதப்படுகிறது. இக்கெடுதல் விளைவிக்கும் நிலை தோசம் எனப்படுகிறது.

<u>திதி</u>

நம் முன்னோர் நாள், தேதி பயன்பாடு வழக்கில் தோன்றுவதற்குமுன் திதியைப் பயன்படுத்தினர். இத் திதி என்பது சந்திர நாள் அல்லது சந்திர சக்தி என்பதைக் குறிக்கப் பயன்படுகிறது. அமாவாசையை அடுத்த முதல் நாள் 'பிரதமை' என்றும், 2 ஆம்நாள் 'துவிதியை' என்றும், 3 ஆம் நாள் 'திரிதியை' என்றும், 4 ஆம் நாள் 'சதுர்த்தி' என்றும், 5 ஆம் நாள் 'பஞ்சமி' என்றும், 6 ஆம் நாள் 'சஷ்டி' என்றும், 7 ஆம் நாள் 'சப்தமி' என்றும், 8 ஆம் நாள் 'அஷ்டமி' என்றும், 9 ஆம் நாள் 'நவமி' என்றும், 10 ஆம் நாள் 'தசமி'

என்றும், 11 ஆம் நாள் 'ஏகாதசி' என்றும், 12 ஆம் நாள் 'துவாதசி' என்றும், 13 ஆம் நாள் 'திரயோதசி' என்றும், 14 ஆம் நாள் 'சதுர்த்தசி' என்றும், 15 ஆம் நாள் 'பௌர்ணமி' என்றும் பெயரிடப்படுகின்றன.

அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரையுள்ள இந்த 15 தினங்கள் வளர்பிறை எனப்படுகிறது. பௌர்ணமியிலிருந்து அமாவாசை வரையிலுமான திதிகளும் மேற்கூறிய பெயர்களையே பெறுகின்றன. இது தேய்பிறை எனப்படுகிறது.

இதுகாறும் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ள இச்சோதிட அறிமுகப்பகுதி நட்சத்திர மாலையை நன்கு புரிந்துகொள்வதற்குப் பயன்படும் என்ற நோக்கிலும், சோதிடத்துறையில் ஆய்வாளர்களை ஆர்வங்காட்டத் தூண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் அமைக்கப்பட்டது.

***

நூல் திறனாய்வு

```
**********************
*                    *
*    நூல் திறனாய்வு    *
*                    *
**********************
```

இச்சுவடியின் அமைப்பு எளிமையும் தெளிவும் பெற்றுள்ளது. இருப்பினும், சுவடியில் கையாளப்பட்டுள்ள கருத்துகளை அவற்றின் விளக்கங்களை ஓரளவிற்காவது ஆய்வுப் பார்வையில் நோக்க வேண்டியது இங்கு அவசியமாகிறது. எனவே, இப்பகுதியில் இச்சுவடியிலுள்ள குறை நிறைகள் சீர் தூக்கிப் பார்க்கப்படுகின்றன.

நட்சத்திர மாலையின் அமைப்பு

இச்சுவடியில் மேடம் முதல் மீனம் வரையிலான 12 இராசிகளுக்கும் ஒவ்வொரு பாடல்மூலம் பொதுப்பலன் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அந்த நட்சத்திரத்தில் பிறந்தவரின் பெயருக்கென 4 முதல் எழுத்து உச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தை பிறந்தவுடன் எந்த நட்சத்திரம் என அறியப்பட்டு 4 எழுத்துகளில் ஏதேனும் ஒன்றை முதல் எழுத்தாக வரும்படி பெயர் சூட்டுவர். இங்ஙனம், பெயர் வைப்பதால் பெயரைக்கொண்டே ஒருவரின் நட்சத்திரத்தை அறிய முடியும்.

27 நட்சத்திரங்களுக்கும் முறையே ஒவ்வொரு பாடல் பொதுப் பண்புகளை உணர்த்தும் நோக்கில் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்குரிய தெய்வம், பூதம், கோத்திரம், சாதி, யோனி, பட்சி, விருட்சம், கணம், நட்சத்திரத்தின் உருவ அமைப்பு, இராசி, வாரம், சூனியம் ஆகியவை சுட்டப்பட்டுள்ளன. இங்ஙனம் இந்த 12 உருப்படிகளும் எல்லா நட்சத்திரத்திற்கும் சுட்டப்படவில்லை. ஒரிரு உருப்படிகள் ஒருசில நட்சத்திரத்திற்குச் சுட்டப்படாமல் விடப்பட்டுள்ளன.

எ.டு. அசுவினி - 12 உருப்படிகளும் அமைந்துள்ளன.
திருவாதிரை - 9 உருப்படிகளே அமைந்துள்ளன.

1. தெய்வம் - மகேஸ்வரன், 2. பூதம் - பிருதிவு, 3. சாதி- உத்திரியன், 4. யோனி - செந்நாய், 5, பட்சி - ஆந்தை, 6. விருட்சம் - செங்காலி மரம், 7. நட்சத்திரம் - எருக்கம்பூப் போன்றிருக்கும்.

நட்சத்திர நாள்

ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்திற்குரியது. அந்தக் குறிப்பிட்ட நட்சத்திரத்தினைத்தன்று ஒருவருக்கு நோய்கள், துன்பங்கள் ஏற்பட்டால் எப்பொழுது நீங்கும் என்ன பரிகாரம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த நட்சத்திர நாள் சுப காரியங்கள் செய்வதற்குரியதாக் என்றும் கூறப்பட்டுள்ளது.

கால்கள்

ஒவ்வொரு நட்சத்திரமும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு, கால் அல்லது பாதம் என்ற குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு ஒரு நட்சத்திரத்தின் நான்கு கால்களுக்கும் நான்கு பாடல்கள்மூலம் பொதுப் பண்புகள் கூறப்பட்டுள்ளன. நான்கு கால்களுக்கும் நான்கு காலச் சக்கரங்கள் கொடுக்கப்பட்டு, அதற்கு வயது குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலச்சக்கரம் 9 உருப்படிகளைக் கொண்டுள்ளது. 10 உருப்படிகளும் 8 உருப்படிகளும் ஒருசில கால்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மையானவற்றில் அவற்றின் கூட்டுத்தொகை சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சிலவற்றிற்குக் கூட்டு எண்ணிக்கை தவறாகக் காணப்படுகிறது.

எ.டு. மகம் - 3 ஆம் கால்

கன்னி புதன்	- 9,	மிதுனப்புதன்	- 9,	தனுசுவியாழம்	- 10
சிங்கமாதித்தன்	- 5	ரிடபவெள்ளி	-19	மகரச்சனி	- 4
கடகச்சந்திரன்	-21	மேடச் செவ்வாய்	- 8	கும்பச்சனி	- 4

ஆக வயது - 105 (89)

மகாதிசை

ஒவ்வொரு நட்சத்திரத்தின் இறுதியில் மகாதிசைக்கு உரிய வயதும் முறையும் கூறப்பட்டுள்ளது. அதாவது, 'விம்சோத்திரி திசை' கொடுக்கப் பட்டுள்ளது.

கோள்கள்

இறுதி 8 பாடல்களில் சூரியன், குரு, சனி போன்ற கோள்கள் நின்ற வீட்டிற்குரிய பலன்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சந்திரன், செவ்வாய்க்குரிய பலன்களும் உரைநடையில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு இராசியின் அதிபதிகள், கோள்கள், உச்சம் அடையும் இராசிகள், நீச்சம் அடையும் இராசிகள் ஆகியன இராசிச் சக்கரம் அல்லது கட்டம் வரைந்து காண்பிக்கப்பட்டுள்ளன.

மொத்தப் பாடல்கள்

இந்நூலில் மொத்தம் 155 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

12 இராசிகள்	...	12	பாடல்கள்
27 நட்சத்திரங்கள்	...	27	பாடல்கள்
27 நட்சத்திரத்தின் 4 கால்களுக்கு	(27 × 4)	108	பாடல்கள்
கோள்கள் நின்ற இராசிகளுக்கு ஏற்பச் சொல்லப்பட்ட பலன்கள்		8	பாடல்கள்
மொத்தப் பாடல்கள்		155	

ஆனால், இச்சுவடியில் அசுவினி முதற் காலுக்கும், மூலம் நான்காம் காலுக்கும் பாடல்கள் இல்லாமல் இருந்தன. 2640 எண்ணிட்ட சுவடியுடன் இப்பாடல்கள் ஒப்புநோக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன. மேலும், ஒரு சில பாடல்கள் குறைபாட்டுடன் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றிற்கும் தகுந்த சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

எ.டு. திருவாதிரை, பாடல் எண் 27, நீதும் வறி

அரசநெறி பலவும் பேசும் ஆதிரை நாளி னாலே

கோள்களின் வேறு பெயர்கள்

இச்சுவடியில் கோள்கள் வெவ்வேறு பெயர்களால் சுட்டப்பட்டுள்ளன.

சூரியன் – ஆதித்தன், கதிரவன்.
சந்திரன் – மதி,
செவ்வாய் – எறியன், சேயன்.
புதன் – புத்தி.
வியாழன் – இராசா, குரு.
வெள்ளி – சுக்கிரன்.
சனி – காரியன்.

நட்சத்திரங்களின் வேறு பெயர்கள்

சில நட்சத்திரங்களும் வேறு பெயர்களால் சொல்லப்படுகின்றன.

திருவாதிரை – ஆதிரை.
அஸ்தம் – அத்தம்.
சுவாதி – சோதி.

சிம்மராசி, சிங்கம் என்ற பெயரால் கூறப்படுகின்றது. பெரும்பாலான பாடல்கள் செறிவோடு காணப்படுகின்றன. சோதிடக் கலைச் சொற்களும் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

"வெறிசேர் குழலாள் மடமாதே வியாழக் காலிற் பிறந்தவ னாலேல்

என்ற அடியிலுள்ள 'வியாழக்கால்' என்ற சொல் சதயம் நாலாங்கால் என்பதைக் குறிக்கிறது.

நட்சத்திரத்திற்குரிய எழுத்துகள்

இச்சுவடியில் ஒவ்வொரு நட்சத்திரத்திற்குமுரிய 4 எழுத்துகள் சுட்டப் பட்டுள்ளன. பொதுவாகச் சோதிடமுறையிலும் நன்னாக்கு எழுத்துகளே 27

நட்சத்திரத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இச்சுவடியில் திருவாதிரைக்கு 5 எழுத்தும் உத்திரட்டாதிக்கு 3 எழுத்தும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் கவனக்குறைவால் ஓர் எழுத்துக் குறைய வாய்ப்பிருக்கிறது. அதுபோல் எழுத வில்லை என நினைத்து 'க'வை (கூ, கு, கா, ஙு, சா) இரண்டுமுறை எழுதியிருக்கலாம். ஆனால், இந்த 3 எழுத்தும் 5 எழுத்தும் ஆசிரியரால் இரு இடங்களில் இதுபோலவே சுட்டப்படுவதால் இது ஆசிரியரின் கவனக்குறைவு அன்று.

எனவே, இது ஆசிரியரது சோதிடப் புலமையை வெளிப்படுத்தும் வகையில்தான் அமைந்துள்ளது. அச்சு நூல் எழுதிய ஆசிரியர் இதுபற்றிக் குறிப்பிட்டு இது தவறு என்று எங்கும் சுட்டியமை காணப்படவில்லை. எனவே, அவர்கள் இச்சுவடியைப் பார்க்காததும் காரணமாகலாம்.

இந்நூலிலுள்ள நட்சத்திரப் பலனை அறியும்முறை

இப்பகுதியில் சுவடியில் கூறப்பட்டுள்ள நட்சத்திரங்களின் பலன்களை ஒவ்வொருவரும் அறிந்துகொள்வது எப்படி என்பதைக் கீழ்வருமாறு கொள்ளலாம்.

ஒருவர் பிறந்த நட்சத்திரம் எந்த ராசியில் அமைகின்றது என முதலில் அறிந்துகொள்ள வேண்டும். முதற்கண் இந்த ராசிக்குரிய பாடலின் பொதுப் பண்புகளை அல்லது பலன்களைத் தனியே எடுத்து எழுதிக்கொள்ள வேண்டும். அதேபோல், அந்த நட்சத்திரத்திற்குரிய பாடலின் பொதுப் பண்புகளையும் குறித்துக்கொள்ள வேண்டும். பின்பு சிறப்புக் குறிப்பான அந்த நட்சத்திரத்தின் எந்தக் கால் பகுதியில் பிறந்தவர் என்பதை அறிந்து, அதற்குரிய பாடலின் பொருளையும் எழுதிக்கொள்ள வேண்டும். அதாவது சந்திரன் நின்ற இடத்திற்கு 'நட்சத்திரம்' என்று பெயர். சந்திரன் ஒவ்வொரு நாளும் ஒரு நட்சத்திரத்தில் சஞ்சரிப்பான். இந்த ஒரு நட்சத்திரம் 4 சம பாகங்களாகப் பிரிக்கப் படுகிறது. ஒருவரின் பிறந்த நேரத்தைக்கொண்டு இந்தக் கால்களில் எந்தக் 'கால்' அவருக்குரியது என்பதைக் கண்டுகொள்ள முடியும்.

இம்மூன்று பாடல்களில் கூறப்பட்டுள்ள பலன்களே குறிப்பிட்ட அந் நட்சத்திரக் காலிற் பிறந்தவர்க்குரிய பொதுப்பலன்களாகும். இப்பலன்களைச்

சீர்தூக்கிப் பார்த்துத் தருந்த முடிவினை எடுப்பதன்மூலம் சரியான பலனை அறிய முடியும்.

எ.டு. மகம் நட்சத்திரத்தின் மூன்றாங்காலில் பிறந்தவருக்கு:

சிங்கராசியின் பலன்

உறுதியான மனம் படைத்தவன்; வஞ்சகம் பேசமாட்டான்; வலிமை மிக்கவன்; பழிச்சொல்லுக்கு அஞ்சுபவன்; கலைகள் பலவற்றையும் பயிலக்கூடிய அருளுடையவன்; முன்கோபி.

மக நட்சத்திரத்தின் பலன்

செல்வத்தை விரும்பி ஈட்டுவான்; மணியும் பொன்னும் விரும்புவான்; நினைத்தது முடிக்கவல்லவன்; சினத்தை நீக்கிப் பேசுவான்; தேசம் போய்த் திரிய வல்லன்; மனத்துடன் கல்வி கற்பான்.

மகம் - மூன்றாங்கால்

மந்திர மறைகள் கற்பான்; பெண்களால் மயக்க நிலையையும் அடைவான்; நல்ல அறிவுடையவன்; தோள் பகுதி கேதுவிற்குரியது; நம்புவதற்கு அரிய பொய்களைச் சொல்வான்; அரும்பொருளோடு வாழ்வான்; நல்ல மனம் படைத்தவன்.

மேலும், ஒரு நட்சத்திரத்திற்குரியோரின் குணநலன்கள் சிலவற்றை உரைநடையிலும் ஒருசில வரிகளால் விளக்கியுள்ளார்.

எ.டு. அசுவினியில் பிறந்தவனின் குணம்.

"சிறந்தவர்க்கு நல்லவன்; அலங்காரப் பிரியன்; ஒழுக்கமுடையவன்; பணியார் சவற்கப் பிரியன்; மார்பும் நெற்றியும் உயர்ந்திருக்கும்."

ஒவ்வொரு நட்சத்திரத்திற்குரிய தெய்வம் முதலியன

தெய்வம் முதல் சூனியம்வரை கூறப்பட்டுள்ள 12 உருப்படிகளில் பல திருமணப் பொருத்தம் பார்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. சான்றுக்கு, அவற்றுள் ஒன்றான கணப்பொருத்தம் பற்றிக் கூறப்படுவதாவது:

ஆண் பெண் இருவரும் ஒரே கணத்தில் இருப்பின் பொருத்தம் சரியாக வருகின்றது என்று பொருள். ஆண் நட்சத்திரம் தெய்வ கணமாகவும், பெண் நட்சத்திரம் மனித கணமாகவும் இருப்பின் இதுவும் சரியாக உள்ளதென்று பொருள். ஆனால், இராட்சசக் குணமும் மனித குணமும் அமையின் பொருத்தம் வரவில்லை என்ற முறையில் இத்திருமணப் பொருத்தங்கள் பார்க்கப்படுகின்றன.

நட்சத்திரங்களின் நாளின் பலன்கள்

ஒவ்வொரு நட்சத்திரத் தினத்தன்று நிகழக்கூடிய நிகழ்ச்சிகளுக்குப் பலன்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது, குறிப்பிட்ட நட்சத்திரம் நடக்கும் நாளில் ஒருவர் நோய்வாய்ப்பட்டால் எவ்வளவு நாள்கள் துன்புறுவர்; இந்நோய் நீங்குவதற்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும் என்பன குறிப்பிடப்படுகின்றன. அதேபோல், அந்நாள் திருமணம் நிகழ்த்த, பயணம் மேற்கொள்ள, நற்காரியங்கள் செய்ய உகந்த (ஏற்புடைய) நாளா என்றும் உரைக்கப்பட்டுள்ளது.

எ.டு. அசுவினி.

"இந்நாளில் வெதுப்புத் தோன்றில் 23 நாழிகையில் தத்து. இதற்குப் பரிகாரம் ஓமம் பண்ணவும்; இந்நாளில் விவாகம் பண்ண, பொன், பூஷணம், கோடியுடுக்க சிரார்த்தம் பண்ண நல்லது; யாத்திரை போகில் உகந்தாமும். இந்நாளில் வியாதி தோன்றில் பத்து நாளில் போறாடும்."

காலச் சக்கரமும் வயதும்

ஒவ்வொரு காலில் பிறந்தோருக்கும் ஒவ்வொரு காலச் சக்கரம் ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் காலச் சக்கரம், இக்குறிப்பிட்ட காலில் பிறந்தோர் வாழக்கூடிய வயதைத்தான் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. ஆனால், இதுபற்றிய எந்த விளக்கமும் சுவடியில் இல்லை.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தோருக்குரிய மகாதிசை ஆண்டையும் (அனைவருக்கும் 120), மேற்கூறியவாறே விளக்கம் இன்றிச் சுட்டியுள்ளது. ஆனால், இதனைத் தொடர்ந்து இம் மகாதிசையில் இறப்பு நிகழும் வயதைக் கூறுவதால் இம் மகாதிசை ஆண்டும் ஒருவர் வாழும் வயதையே குறிக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இறுதியில் கூறப்படும் வயதிற்கும் குறிப்பிட்ட ஒரு காலிற்குக் கூறப்பட்டுள்ள காலச் சக்கரத்தின் வயதிற்கும் வேறுபாடு தோன்றக் காரணம் ஒருவர் பிறந்த நேரத்தின் கோள்கள் அமைந்துள்ள விதமே. அதேபோல், பலர் குழந்தைப் பருவத்தில், இளம்பருவத்தில் இறப்பதற்கும், ஒரு சிலர் மகாதிசையில் கூறப்பட்ட 120 ஆண்டுகளுக்குமேல் வாழ்வதற்கும் இதுவே காரணமாகின்றது.

எனவே, நட்சத்திரப் பலன் என்பது அந்நட்சத்திரத்தில் பிறந்த அனைவருக்கும் கூறப்படுகின்ற பொதுப் பலன்களாகவே அமைகிறது. அதேபோல், ஒவ்வொரு நட்சத்திரக் காலிற் பிறந்தோருக்குக் கூறப்படுவதும் பொதுப்பலனே. ஆனால், ஒருவர் பிறந்த தேதியில் நின்ற கோள்களின் நிலைக்கேற்ப விளையக் கூடிய பலன்கள் தனிமனிதனுக்குஉரிய ஒன்றாகின்றது. ஆகவே, கோள்கள் நின்ற நிலையையும் சோதிடமுறையில் உணர்ந்தால் சரியான பலன்களை நன்முறையில் கணக்கிட முடியும்.

<u>விம்சோத்திரி திசை</u>

ஒவ்வொரு நட்சத்திரத்தில் பிறந்தவர்க்கும் பிறந்த நேரத்தில், அந்த நட்சத்திரத்தின் அதிபதியான மகாதிசையின் பலன் நடக்கும். எ.டு. அசுவினியில் பிறந்தோர்க்கு முதல் அதிபதியான கேதுவின் மகாதிசை முதலில் நடக்கும். பின்பு முறையே சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, வியாழன், சனி, புதன் ஆகிய மகாதிசைகள் நடக்கும். இவையனைத்துத் திசைகளுக்கும் மொத்த ஆண்டுகள் 120 ஆகும். ஒவ்வொரு மகாதிசைக்கும் இத்தனை வருடம் என்ற செய்தி சுவடியில் இடம்பெற்றுள்ளது.

எ.டு. அசுவினி - கேது மகாதிசை

கேது	- 7	சந்திரன்	- 10	வியாழன்	- 16
சுக்கிரன்	- 20	செவ்வாய்	- 7	சனி	- 19
சூரியன்	- 6	இராகு	- 18	புதன்	- 17
				ஆக வயது	120

விம்சோத்திரி திசையில் ஒருவர் 120 வயது வாழக் கூடியவராகச் சோதிடமுறையில் கருதப்படுகிறது. ஒருவரின் ஜாதகத்தில் கோள்கள் நின்ற நிலையின் காரணமாக அவர் வாழக்கூடிய வயது 120 இலிருந்து பெரும்பாலும் மாறிவிடுகிறது. அவ்வாறு மாறக்கூடிய வயதை மேற்கூறிய விம்சோத்திரி முறையைப் பயன்படுத்திக் கணக்கிடுகின்றனர். இந்த 'விம்சோத்திரி திசை' இந்து சோதிட முறையில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இம்முறை சரியானது எனவும் பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். இங்கு ஆசிரியரும் இதையே பின்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த விம்சோத்திரி திசையில் ஒவ்வொரு கோளுக்கும் இவ்வளவு ஆண்டுகள் எனப் பிரித்துப் பாகுபடுத்தியிருப்பது ஏன் எவ்வாறு என்ற விவரம் ஆய்தற்குரியது. இராகுவிற்கும் கேதுவிற்கும் தனி இராசிகள் கொடுக்கப்படவில்லை. ஆனால் 'விம்சோத்திரி' முறையில் அவற்றிற்கும் மகாதிசை ஆண்டுகள் பிரித்தளிக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்குரியோரின் நோய்களும் துன்பங்களும்

மகாதிசைக்கு அடுத்து ஆசிரியர் ஒவ்வொரு நட்சத்திரத்திற்குரியோரின் நோய்களைக் கூறிச் செல்கிறார். அத்துடன் எந்த வயதில் எதனால் கண்டங்கள் நேரிடலாம் என்பதையும் விளக்கியுள்ளார்.

எ.டு. பூரட்டாதி

"இவன் பிறந்தபோது சனிதோசத்தால் தந்து. 3 வயதில் கிரந்தியால்,

9 வயதில் பெண்ணால், 30 வயதில் நீரால், வெதுப்பால் – இராசவால், 55 இல் காய்ச்சல் குளிரால், 67 இல் வாயுவால், 87 இல் வெதுப்பு இருமல் ஆகியன நிகழலாம்."

மேலும், ஒவ்வொரு நட்சத்திரத்தினரும் எத்தனையாவது வயதில் எந்தமாதம், எந்தத் தேதியில், எந்தத் திதியில், எந்த நாளில், எந்த நட்சத்திரத்தில், எந்த நேரத்தில், எந்த முறையில் இறப்பர் எனவும் கூறப் பட்டுள்ளது. ஒருசில நட்சத்திரங்களுக்கு இச்செய்திகளில் ஒன்றிரண்டு விடப் பட்டுள்ளன.

எ.டு. பூரம்

"86 வயது சென்று புரட்டாசி மாதம் 27 ஆம் தேதி அமரபட்சத்தில் அஷ்டமியும் சோமவாரமும் பெற்ற இரவு நாலு நாழிகைக்கு நீர் விக்கி இறைவடி சேர்வார்."

<u>கோள்களின் உதயம்</u>

ஒருவர் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தில் பிறக்கும்போது உதயமாகும் இலக்கினத்தில் இன்னின்ன கோள்கள் நிற்குமேயானால் அதற்குரிய பலன்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

எ.டு. பூரம்

"இவன் பிறந்தபோது ஆதித்தன் உதயமாகில்
வித்துவானாம்; வெள்ளி உதயமாகில் கள்ளனாம்;
சனி உதயமாகில் தேசாந்தரியாவான்; இராகு,
கேது உதயமாகில் மடையனாகும்."

எனவே, ஒரே நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் முரண்பட்ட (செல்வன் – தரித்திரன்) நிலைகளை அடைவதற்கு அவர்கள் பிறந்த நேரத்தில் கோள்கள்

நிற்கும் நிலையே காரணமாகிறது. ஆனால், பிறந்த நட்சத்திரத்தின் அதிபதி ஜாதகத்தில் உச்சம் பெற்றுவிட்டால் இப்பலன்கள் மாறிவிடும்.

எ.டு. உத்திராடம்

"இந்த நட்சத்திரம் உச்சமாகில் மிறைத்தில் நாலு நாழிகை அறும்."

<u>கோள்கள் நின்ற பலன்கள்</u>

சூரியன், குரு, சனி ஆகிய கிரகங்கள் ஒருவரின் ஜாதகத்தில் நின்ற வீட்டிற்குத் தகுந்தாற்போல் பலன்கள் இறுதி 8 பாடல்களிலும் கூறப்பட்டுள்ளன.

எ.டு. 'ஒருவருடைய ஜாதகத்தில் சூரியனும் மூன்றாம் வீட்டு அதிபதியும் முதல் வீட்டில் இருப்பினும், செவ்வாய் 10 ஆம் வீட்டில் இருந்தாலும் அவனுக்குச் செல்வம் உண்டாகுமாம்' என்றவாறு பலன்களை ஆசிரியர் கூறிச் செல்கிறார்.

கிரகங்கள் நின்ற வீடுகளைக் குறித்தபின் பலன் கூறுவதற்குப் பயன்படும் வகையில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து சந்திரனும் செவ்வாயும் ஜாதகத்தில் நின்ற நிலைக்குரிய பலன்களை உரைநடையில் கூறியுள்ளார்.

இதுவரை கூறியவற்றால் இச்சுவடியைப் பற்றிய ஒரு தெளிவு ஏற்படுத்தப் பட்டது. இச்சுவடியிலுள்ள நட்சத்திரப் பலன் எளிமையான முறையில் நூல் பகுதியிலேயே அமைந்துள்ளதால் அது பற்றிய கருத்துகள் இங்குத் தொகுத்தளிக்கப் படவில்லை. எனினும், இச்சுவடியில் சில கடினமான சொற்கள் இடம்பெற்றிருப் பதால், பொருளைப் புரிந்துகொள்வதில் தடையும் ஏற்படாவண்ணம் இறுதியில் அருஞ்சொற்பொருள் கொடுக்கப்பட்டுள்ளது.

சோதிடப் புலமையுடன் இச்சுவடி ஆராயப்படும்போது, இவ்வாய்வு விரிந்த நிலையில் அமையும்; மேலும், இதன் தரத்தையும் சிறப்பையும் உண்மை நிலையையும் வெளிப்படுத்த முடியும்.

நூல்

நட்சத்திர மாலை

நூல்

கணபதி துணை

நட்சத்திர மாலை

செஞ்சிலாதிபதி துணை

சு - சே - சோ - லா - அசுவினி - மேடராசியின் பலன்

1. செய்வினை திருந்தச் செய்யும் சேயிழை யார்க்கு நல்லன்
மையுரை மணியும் பொன்னும் மகிழ்ச்சியா யணைய வல்லன்
பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் புகழ்பெற வாழவல்லன்
ஐயமிட் டுண்ண வல்லன் அசுபதி நாளி னானே.

இப்பால் மேடராசியின் பலன்

2. வடிவது சால நல்லன் வஞ்சகம் பேச மாட்டான்
கடவரை கேடு சொல்லான் கலைபல கற்க வல்லன்
உடையொடு பூவும் சாந்தும் உண்மையா யணைய வல்லன்
தடவரை கேடு சொல்லான் தகர்விலங் கிடத்தி னானே.

என்பது, இன்னாளுக்குத் தெய்வம் - ஈசுவரன், பூதம் - பிருதிவு, கோத்திரம் - மகேஸ்வரி, சாதி - வைசியன், யோனி - கடுவன், பட்சி - இராசாளி, விருட்சம் - எட்டிமரம், கணம் - தெய்வ கணம், ஆறு நட்சத்திரம் - குதிரைத் தலைபோலிருக்கும், இராசி - மேடம், வாரம் - செவ்வாய்க்கிழமை, சூனியம் - கார்த்திகை பகை.

இந்நாளில் வெதுப்புத் தோன்றில் 25 நாழிகையில் தத்து. இதற்குப் பரிகாரம் ஓமம் பண்ணவும். இந்நாளில் விவாகம் பண்ண, சீமந்தம் பண்ண, பொன்,

பூடநனம், கோடியுடுக்க, சிரார்த்தம் பண்ண நல்லது. யாத்திரை போகில் அகந்தாழும். இந்நாளில் வியாதி தோன்றில் பத்து நாளில் போராடும் (போகும்). அரசங்கொழுந்து, கருப்பங்கட்டியுங் கொண்டுவந்து விருட்சத்தடியில் சலக்கரையில்யாதல் சமுத்து வைத்து ஓமம்பண்ணி 'அசுவதி பிரமத்தி தேவி பிரதனாலா சுவாகா' என்று பண்ணிட்டுவருவது நாலு நாளில் தீரும்.

இப்பாலிவன் குணம்

சிறந்தவர்க்கு நல்லவன்; அலங்காரப் பிரியன்; ஒழுக்கமுடையவன்; பணியார் சுவற்கப் பிரியமுள்ளவன்; மார்பும் நெற்றியும் உயர்ந்திருக்கும்; முகத்திலே அரையிலே மார்பிலே யிடையிலே யாதல் மருவு மச்சமுள்ளவன்; கையிலே புள்ளடி ரேகை விழுந்திருக்கும்.

(முதற்கால் மேடநச் செவ்வாயின் பலன்

3. அங்கி ருவன் மெய்யன் கறுசேர்க் குதலை வாயன்
மருவிய மனத்தன் பெண்மேல் மனமது சார (றில்லான்)
(முது)விய கொடுமை செய்யும் முதுகினில் மருவுண் டென்னும்
செறிதருங் கூந்தல் பேதுவம் சேயினங் கி(ழுத்தி னானே).)

முதற்காலுக்குச் காலச் சக்கரம்

மேடநச் செவ்வாய்	- 7	றிடநபம்வெள்ளி	-16	மிதுனப்புதன்	-9
கடகச்சந்திரன்	-21	சிங்கமாதித்தன்	- 5	கன்னிபுதன்	-16
விருச்சிகச்செவ்வாய்	- 7	துலாம் வெள்ளி	16	தனுசுவியாழம்	-10
				ஆக வயது	100

இப்பால் இரண்டாங்கால் றிடநப வெள்ளியின் பலன்

4. தெள்ளிய லார்க்கு நல்லன் சேயிழை யாலரப் பேறும்
ஒள்ளிய கன்னி னானே ஒண்பொருள் கால னாகும்
பள்ளியும்பலவும் கற்கும் பாக்கிய முடைய னாகும்
வெள்ளியங் கிடநத்தில் வந்த விருப்புடைக் காளை தானே.

ரிஷபக் காலுக்குக் காலச் சக்கரம்

மகரச்சனி - 4	விருச்சிகச் செவ்வாய் -7	கடகச்சந்திரன் -21
கும்பச் சனி - 4	துலாம் வெள்ளி - 16	சிங்கமாதித்தன் - 5
மீனவியாழம் -10	கன்னிபுதன் - 9	மிதுனப்புதன் - 9
		ஆக வயது 85

இப்பால் மூன்றாங்கால் மிதுனப்புதன் குணம்

5. மேதையா லலங்கள் சால வேந்தரால் விருப்ப முண்டாம்
மாதுமா ஞருவு மாகும் மனம் பொறாரக் கரிய ஒன்றான்
தாது சேர் குழலாள் தன்மேல் தன்பொருள் சார நல்லன்
மீதுயர் வலக்கை யென்ன் (ள்ளான்) மிதுனவன் கிடந்தி னானே.

மிதுனக்காலுக்குக் காலச் சக்கரம்

ரிஷபம் வெள்ளி - 16	கும்பச் சனி - 4	விருச்சிகச்செவ்வாய் - 7
மேஷச் செவ்வாய் - 7	மகரச் சனி - 4	ரிஷபம் வெள்ளி -16
மிதுன (மீன) வியாழம் - 10	தனுசவியாழம் -10	மிதுனப்புதன் - 9
		ஆக வயது 85 (83)

இப்பால் நாலாங்கால் கடகச் சந்திரன் பலன்

6. தலையசை கறண்டி யாகும் வெம்பெருந் துடைய னாகும்
மலைதரு வானி பத்தில் வடிவன சிறந்த மேனி
கலைபல நன்று கற்கும் கடிமதக் காளை யாகும்
மலையென வளர்ந்த தோளான் மதியினைக் கிடந்தி னானே.

கடகக் காலுக்குக் காலச் சக்கரம்

கடகச்சந்திரன் - 21	துலாம் வெள்ளி - 16	மகரச்சனி - 4
சிங்கமாதித்தன் - 5	விருச்சிகச் செவ்வாய் 7	கும்பச்சனி - 4
கன்னிபுதன் - 9	தனுச வியாழம் - 10	மீன வியாழம் -10
		ஆக வயது 86

காலச்சக்கரம் முற்றும்.

இப்பால் மகாதிசையின் பலன்

கேது	7	சந்திரன்	10	இராசா	16
சுக்கிரன்	20	செவ்வாய்	7	சனி	19
சூரியன்	6	இராகு	18	புதன்	17

ஆக வயது 120

இனிக் கேதுவின் திசையில்: மூன்று வயதில் பிள்ளைப் பிணியால், நான்கு வயதில் தலைல் நீரால், ஏழு வயதில் நாலுகால் மிருகத்தால், பத்து வயதில் நீரால், பதின்மூன்று வயதில் கண்ணோயால், இருபதாவது வயதில் விசத்தால், இருபத்திரண்டாவது வயதில் பெண்களால், இருபத்தேழாவது வயதில் மருந்து சருவ விசத்தால், நாற்பத்தைந்து வயதில் வாதத்தால், கள்ளரால், ஐம்பது வயதில் நெருப்பால் - கன்னியால் - வயிற்றுக்கடுப்பால், எழுபத்தைந்து வயதில் கள்ளரால் - சத்துருவால், எண்பத்திமூன்று வயதில் வெதுப்பால் - வயிற்றுக்கடுப்பால், எண்பத்தைந்து வயதில் நாலுகால் மிருகத்தால், எண்பத்தொன்பது வயதில் வயிற்றுக்கடுப்பால் (ஆகியன நிகழலாம்). நூறு வயது சென்று சித்திரை மாதம் 13 ஆம் தேதி பூர்வ பட்சம் திரையோதசியும் வியாழக்கிழமையும் ரோகிணி நட்சத்திரம் நான்காம் சாமம் இறைவனடி சேர்வார்.

வி-ஓ-லே-லோ, பரணிகை மேடராசியின் பலன்

7\. தானங்கள் பலவுஞ் செய்வான் தந்தைதாய் தன்னைப் பேறும்
காலைற் காலந் தன்னில் காந்தநோய் பற்றித் தீரும்
மானம துடைய னாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்
புன்னிய மடவார்க் கன்பன் புகழ்பெறும் பரணி யாமே.

இந்நாளுக்குத் தெய்வம் - அதித்தன், புதம்ர பிருதிவு, கோத்திரம் - அகஸ்தியன், சாதி - பிராமணன், யோனி - கெளித்தி, பட்சி- காகம், விருட்சம் - நெல்லி மரம், கணம் - தெய்வகணம், ராசி- மேடம், வாரம் - செவ்வாய்க்கிழமை, சூனியம் - சித்திரை மாதம். இவன் சீமானாயிருப்பான்; முன்கோபி; வித்தை

யுடையவன்; வழிபாருடையன்; சாலவழகியன்; தான தர்மம் பண்ண, சிவகாரியம் பண்ண நன்று. ஆண்டு பிறக்கில் அகந்தாழும். பதினைந்து நாழிகைக்குமேல் நாலு நாழிகைக்கு(ள்) விசம். இந்நாளில் வெதுப்புத் தோன்றுமாகில் தத்துண்டு. இதுக்கு நெய்கொண்டு ஓமம் பண்ணத் தீரும். மூன்று நாளில் போகும்.

இவன் குணம்

ஐஸ்வர்யமுடையன்; தெய்வபத்தியுடையவன்; போசனப்பிரியமுள்ளவன்; பல பிள்ளைகளைப் பெறுவான்; முகத்தில் மருவுண்டு.

முதற்கால் சிங்கத்தின் பலன்

8. நீதிய கருமஞ் செய்வான் நிபுணனாய் வழக்குச் சொல்லும்
மாளிகை மனையில் வாழ்வான் மன்னரால் மகிழ்ச்சி யுண்டாம்
வாளிசேர் கன்னி னான்மேல் வலதிசை மருக்கிக் கொள்ளான்
காளிசேர் வடிவ னாகும் கதிரவற் கானி னானே.

இப்பால் முதற் காலுக்குக் காலச் சக்கரம்

விருச்சிகச் செவ்வாய்	- 7	கடகச்சந்திரன்	21	மேடச்செவ்வாய்	7
துலாவெள்ளி	-16	சிங்கமாதித்தன்	5	மீனவியாழம்	10
கன்னிபுதன்	9	மிதுனப்புதன்	9	(ரிடபவெள்ளி	16)
				ஆக வயது	100

இப்பால் இரண்டாங்கால் கன்னிபுதன் பலன்

9. மந்திர மறைகள் கற்கும் மாதரால் மகிழ்ச்சி யுண்டாம்
சுந்தரப் புலன்கள் சொல்லும் சோர்விலா திறமு முண்டாம்
அந்தமில் பொய்கள் சொல்லான் அரும்பொருள் நெருங்கி வாழும்
புத்தியே பெரியோ னாகும் புதனிலங் கிடந்தி னானே.

இரண்டாங்காலுக்குக் காலச் சக்கரம்

கும்பச்சனி	4	மேடச்செவ்வாய்	7	கடகச்சந்திரன்	21
மகரச்சனி	4	ரிடபம் வெள்ளி	16	சிங்கமாதித்தன்	5
தனுசுவியாழம்	10	மிதுனப்புதன்	9	கன்னிபுதன்	9

ஆக வயது 85.

இப்பால் மூன்றாங்கால் துலாம் வெள்ளியின் பலன்

10. மார்பகன் உயர்ந்த மெய்யன் மதிமுக மருவுன் டென்றும்
சீர்தரு மூன்றில் பேழும் செய்தருங் கொடுங்கண் ணாளன்
ஆதர வுடைய பெண்மேல் அறிவுட வன்று கற்றுக்
சார்வது மாதர் தன்பால் தரும்புகழ்க் காளி யானே.

துலாங் காலுக்குக் காலச் சக்கரம்

துலாம் வெள்ளி	16	மகரச்சனி	4
விருச்சிகச்செவ்வாய்	7	கும்பச்சனி	4
ரிடப வெள்ளி	16	மீனவியாழம்	10
மிதுனப்புதன்	9	மேடச்செவ்வாய்	7
தனுசுவியாழம்	10	ஆக வயது	83

நாலாங்காலுக்குச் சக்கரம் - விருச்சிகச் செவ்வாயின் பலன்

11. வெட்டெனப் பேச வல்லன் வெகுட்சியு முடைய னாகும்
சிட்டரைச் சேர்ந்து வாழும் செருங்குறி யாள னாகும்
பட்டிகைக் கின்ப தோளான் படைக்கெலாந் தலைவ னாகும்
எச்சனிக் கொன்று மஞ்சான் எரியினங் கிடந்தி னானே.

இப்பால் நாலாங்காலுக்குக் காலச் சக்கரம்

கடகச் சந்திரன்	21	மீனவியாழம்	10
சிங்கமாதித்தன்	5	மகரச்சனி	4
மிதுனப்புதன்	9	கும்பச்சனி	4

ரிடபவெள்ளி	16	தனுசு வியாழம்	10
மேடச்செவ்வாய்	7	ஆக வயது	86

<u>மகாதிசையின் பலன்</u>

சுக்கிரன்	20	இராசா	16
சூரியன்	6	சனி	19
சந்திரன்	10	புதன்	17
செவ்வாய்	7	கேது	7
இராகு	18	ஆக வயது	120

இவன் பிறந்த வாண்டில் பிள்ளைப் பிணியால் தத்து. ஐந்து வயதில் இரணங்களால், நாற்பது வயதில் நான்குகால் மிருகத்தால், ஐம்பது வயதில் சூலியத்தால், அறுபது வயதில் விலங்கினால், எழுபது வயதில் இருமலால் (ஆகியவை நிகழலாம்). நூறு வயது சென்று வைகாசி மாதம் வெள்ளிக்கிழமை பரணி நாளில் இறைவனடி சேர்வார்.

(இவன் பிறந்தபோது உயிரான இராசியில் சூரியன் நிற்கில் சீமானாம்; சந்திரன் நிற்கில் இராச புருசனாம்; செவ்வாய் நிற்கில் கல்வியனாம்; புதன் நிற்கில் வியாபாரி யாவான்; வியாழன் நிற்கில் இராசா ஆவான்; வெள்ளி நிற்கில் ஆய மணியம் பண்ணி பொல்லாதவனாம்; சனி நிற்கில் நிட்டூரனாம்; இராகு நிற்கில் சோரனாம்; கேது உதயமாகில் கள்ளனாயும் இடியனுமாய்; இவன் செனிக்கையில் இராகு, வெள்ளி, சனி உச்சமாகில் மாதா பிதாவைக் கொல்லும். இதற்கு ஏகாதசி பட்டினி விடுக.)

<u>அ-இ-உ-ஏ, கிருத்திகை - மேடராசி</u>

12. வார்த்தைய துடைய னாகும் வழக்கறிந் துரைக்க வல்லன்
கூர்த்துடன் மனத்த னாகும் குணமுடன் கல்வி கற்கும்
போர்க்கலைக் குரிய னாகும் புகழ்படப் பொருந்தி வாழும்
கார்த்திகை நாளில் வந்த கருத்துடன் காளை தானே.

இப்பால் இன்னாளுக்குத் தெய்வம் - அக்கினியாவான், பூதம்-பிருதிவி, கோத்திரம் - அகஸ்த்தியன், சாதி - சூத்திரன், யோனி-வெள்ளாடு, பட்சி - மயில், விருட்சம் - அத்திமரம், கணம்- இராட்சச கணம், இராசி - முதற்கால் மேடம், வாரம் - செவ்வாய்க்கிழமை, சூனியம் - சித்திரை மாதம். மூன்றாங்கால் இடப வாரம் வெள்ளிக்கிழமை, வைகாசி மாதம் சூனியம். ஆறு நட்சத்திரம் - தேன்கூடு போன்றிருக்கும். கார்த்திகை மாதம் சூனிய வர்க்கம். இந்நாளில் வெதுப்புத் தோன்றில் ஒன்பது நாளில் தத்து. இதற்கு நெய்யினால் ஓமம் பண்ணுவது. பழமும், பணியாரமும் பலியிடுவது. மூன்று நாளில் தீரும். புதன்கூடில் அமிர்தயோகம், பஞ்சமியும் வியாழக்கிழமையும் கூடில் விடயோகம். சனியும் நவமியும் மரணயோகம்; பிரதமையும் சஷ்டியும் கூடில் தத்துயோகம்.

இவன் குணம்

ஆசாரமுடையவன், மாங்கிஷப்பிரியன்; இந்நாளில் பெண் திரண்டால் மலடியாவாள், கையுங் காலும், உடம்பும் அழகியள்; வயிறு திரண்டிருக்கும்; புத்தியுடையவன்; பண்டிதனாவான்; மார்பில், முதுகில், அரையில் மருவுண்டு.

முதற்கால் தனுசு வியாழத்தின் பலன்

13. செறிந்தன் நாளும் பொய்சொல்லான் சிவந்த கண்ணன் செருத்தகுஞ்சி
அரைஉடை மனத்த னாகும் அருவினை பொருந்த தெய்வம்
பொருள்வளம் பெருக்கச் செய்யும் பாவலர் தம்மைப் பேணும்
தருவெனத் தருவ னாகும் தனுசவியாழக் காலி னானே.

இப்பால் தனுசவியாழக் காலுக்குக் காலச் சக்கரம்

மேடச்செவ்வாய்	7	கன்னிபுதன்	9
இடப வெள்ளி	16	விருச்சிகச்செவ்வாய்	7
தனுசவியாழம்	10	மிதுனப்புதன்	9
கடகச்சந்திரன்	21	துலாம் வெள்ளி	16
சிங்கமாதித்தன்	5	ஆகவயது	100

இப்பால் இரண்டாங்கால்

14. உள்ளமது உடைய னாகும் உறவொடு பழியுஞ் சேரான்
மனமது பெரிய னாகும் மனம்பிறர்க் கறிய ஒண்ணான்
ஒளிதிகழ் மணியு முத்து முண்மையா யணைய வல்லன்
கனமிகுஞ் சிறக்க வாழும் கரியினங் கிடந்த்தி னானே.

கும்பக்காலுக்குக் காலச் சக்கரம்

மகரச்சனி	4	கன்னிபுதன்	9
கும்பச்சனி	4	கடகச்சந்திரன்	21
மீனவியாழம்	10	சிங்கமாதித்தன்	5
விருச்சிகச்செவ்வாய்	7	மிதுனப்புதன்	9
துலாம் வெள்ளி	16	ஆக வயது	85

இப்பால் மூன்றாங்கால் மீன வியாழத்தின் பலன்

15. மாந்தளிர் போல மேனி மனத்தொரு கல்வி கற்கும்
ஏந்திய குலத்துக் கெல்லாம் இசைந்ததோர் ராச னாகும்
காந்தயின் வடக்க மாட்டான் கலங்குழை யவர்க்கு நல்லன்
சேர்ந்தவர்க் கன்ப னாகும் செய்யபொற் காளி னானே.

மூன்றாங்காலுக்குக் காலச் சக்கரம்

மேடச்செவ்வாய்	7	கும்பச்சனி	4
ரிடப வெள்ளி	16	தனுசுவியாழம்	10
கன்னிபுதன்	9	விருச்சிகச்செவ்வாய்	7
மீனவியாழம்	10	துலாம் வெள்ளி	16
மகரச்சனி	4	ஆக வயது	83

இப்பால் நாலாங்காலுக்கு வியாழக்காலின் பலன்

16. சிறிதே யுன்னும் பொய்சொல்லான் சிவந்த கண்ணன் செருகுழலான்
அறிவில் மிகவும் பெருங்குணத்தான் அடைந்தோர் தமக்கு மழவியனாம்
பொறிசேர் குழலே மடமாதே வியாழக் காலிற்பிறந் தன்னானே.

வியாழக் காலுக்குக் காலச் சக்கரம்

மகரச் சனி	4	மிதுனப்புதன்	9
கும்பச் சனி	4	கடகச்சந்திரன்	21
தனுசுவியாழம்	10	சிங்கமாதித்தன்	5
விருச்சிகச்செவ்வாய்	7	மேஷச்செவ்வாய்	7
துலாம் வெள்ளி	16	ஆகவயது	83

இப்பால் மகாதிசையின் பலன்

ஆதித்தன்	6	சனி	19
சந்திரன்	10	புதன்	17
செவ்வாய்	7	கேது	7
இராகு	18	சுக்கிரன்	20
இராசா	16	ஆக வயது	120

இவன் பிறந்தவாண்டில் ஆதித்தன் திசையில்

நான்கு வயதில் அக்கினி பயம்; ஆறு வயதில் நாற்கால் மிருகத்தால், ஒன்பது வயதில் நீரால், பதினொரு வயதில் கல்லோவால், பதினெட்டு வயதில் பேயால், இருபத்திரண்டு வயதில் பெண்களால், இருபத்து மூன்று வயதில் காய்ச்சலால், முப்பத்தாறு வயதில் கள்ளரால், நாற்பத்தாறு வயதில் உரமனை நிடக்ரூரத்தால், நாற்பத்தெட்டு வயதில் வழக்கால், ஐம்பத்தைந்து வயதில் சிலந்தி நீர் ஒட்டால், அறுபத்துமூன்று வயதில் வெருப்பால், எழுபத்தைந்து வயதில் வயிற்றுக்கடுப்பால், எண்பத்தைந்து வயதில் மார்கழி மாதம் அமரபட்சத்து வெள்ளிக்கிழமை(யும்), ஏகாதசியும், கார்த்திகை நட்சத்திரமும் உதித்த ஏழரை நாழிகைக்குமேல் சிவனடி சேர்வார்.

இவன்பிறந்தபோது ஆதித்தன் உதயமாகில் சீமானாம்; சந்திரனுதயமாகில் (சீமானாம்; செவ்வாயாகில் திசைமானாம்; புதன் வித்துவானாம்; வியாழன் சேனாதிபதியாம்; வெள்ளியாகில் மந்திரியாம்; சனியாகில் ஊனனாம்; இராகு தானமீவன்; கேது உதயமாகில் கள்ளனுமாய் விரோதியுமாவான்; இவன் செனிக்கையில் இராகு, கேது, வெள்ளி, சனி உதயமாகில் மாதாவைக் கொல்லும். இதற்கு ஏகாதசி பட்டினி விடவும்).

<u>ஒ-வ-விசவு, உரோகிணி - இடபராசியின் பலன்</u>

17. செய்வினை தெரிந்து செய்வான், சேயிழை யார்க்கு நல்லன்
மையுரை மணியும் பொன்னும் மகிழ்ச்சியா யணைய வல்லன்
நெய்யொடு பால்வி ரும்பும் நிரம்பிய கல்வி கற்கும்
உய்யவே பரிந்தி ருண்ணும் உரோகிணி நாளி னானே.

<u>இடபராசியின் பலன்</u>

